# செந்தமிழ்ச் செல்வி

## திங்கள் வெளியீடு

| சிலம்பு | திருவள்ளுவர் ஆண்டு உ௦௦௪, வைகாசி | பரல் |
| --- | --- | --- |
| ௪௭ | சூன் 1973 | ௧௦ |


# திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் பரல் ௯-இல் ௪௯ஆம் பக்கத் தொடர்ச்சி)

**திருவள்ளுவர் கதைகள் 2 புத்தகங்கள்**

இவற்றை எழுதியவர் க. இனியன் என்னும் சு. அ. இராமசாமிப் புலவராவர். திருக்குறள் கருத்துக்களை மாணவர்களிடம் பரப்புவதற்கு இது சிறந்ததொரு வழி என்று கருதியே அறத்துப் பாலிலிருந்து 42 திருக்குறட்பாக்களையும் பொருட்பாலிலிருந்து 70 திருக்குறட்பாக்களையும் எடுத்து அவற்றை விளக்கக் கூடிய கதைகளை எளிய இனிய நடையிலும் நகைச்சுவை துளும்பும் வகையிலும் ஆசிரியர் எழுதியுள்ளனர். ஒவ்வொரு கதையின் அடியிலும் அதனை விளக்கும் குறட்பா சொற்பொருள் விளக்கத்துடன் பொறிக்கப் பெற்றுள்ளது. இங்ஙனம் அமைக்கப் பெற்ற கதைகளுள் ஒரு சில பழங்கதைகளாகவும் மற்றவை வாழ்க்கை முறையில் நிகழ்ந்துவரும் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்ற கதைகளாகவும் அமைந்து கற்பவர்க்குச் சுவை யூட்டுவனவாகும்.

இம்முறையில் ஒளவையார் ஆத்திசூடிக்கு விளக்கக் கதைகள் எழுதி இரண்டு புத்தகங்களும், கொன்றை வேந்தன், உலகநீதி, வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிவெண்பா, நீதிநெறி விளக்கம் அறநெறிச்சாரம், நாலடியார் ஆகிய பத்து நீதி நூல்கட்கும் பத்து விளக்கக் கதைப் புத்தகங்களும், பழமொழிகள் சிலவற்றிற்கு

விளக்கக் கதைகள் எழுதி இரண்டு புத்தகங்களும் ஆகப் பதினன்கு விளக்கக் கதை நூல்களும் க. இனியன் என்ற புனை பெயரில் எழுதப் பெற்றுக் கற்பார்க்குக் கதை விருந்தூட்டிக் களிப்படையச் செய்கின்றன. நீதி நூற்கதை ஒவ்வொன்றின் அடியிலும் அக்கதையினை விளக்கும் 'நீதிப்பா' சொற் பொருள் விளக்கத்துடன் பதிக்கப் பெற்றுள்ளது. அதேபோல் பழமொழி விளக்கக் கதை ஒவ்வொன்றினடியிலும் அதனை விளக்கும் 'பழமொழி' பதிக்கப் பெற்றுள்ளது.

**இலக்கியச் சிறுகதைகள் 10 புத்தகங்கள்**

இவற்றுள் முதல் நான்கு புத்தகங்களும் திரு சு. அ இராமசாமிப் புலவரும் அவர்தம் நெருங்கிய நண்பர் பண்டித வித்துவான் மீ. பொன் இராமநாதன் செட்டியாரும் இணைந்து எழுதப் பெற்றன. பின் ஆறு புத்தகங்களும் தனித்த முறையில் திரு இராமசாமிப் புலவரால் எழுதப் பெற்றனவாகும். தண்டலையார் சதகம் விவேக சிந்தாமணி திருவாரூர் நான்மணிமாலை, நைடதம், பிரபுலிங்கலீலை, கம்ப ராமாயணம், பாரதம், தனிப்பாடல்கள் முதலிய தமிழ் இலக்கியங்களிலுள்ள சிறந்த பாடல்களைத் தேர்ந்தெடுத்து அப் பாடல்களின் கருத்தை விளக்கியுள்ளார்.

அப் பாடல்களின் கருத்தை விளக்கக் கூடிய கதைகளை ஆசிரியன்மார் இருவரும் 'இலக்கியச் சிறுகதைகள்' என்ற தலைப்பில் எளிய இனிய நடையில் எழுதியுள்ளனர். அவை யாவும் கழகவழி அழகியவாய் அச்சிடப் பெற்றுக் கற்பார்க்குக் கதைவழிப் பன்னூற் பாக்களின் பொருளை, எளிதின் உணர்ந்து இன்புறும் வாய்ப்பினை நல்குகின்றன என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இங்ஙனமே காப்பியக்கதை வரிசையில் ஆறும் புத்தகத்தில் 'யசோதரன்' கதையினையும், ஏழாம் புத்தகத்தில் வளையாபதி, குண்டலகேசி, நீலகேசி ஆகிய மூன்று காப்பியக் கதைகளையும் எழுதிப் பள்ளி மாணவர்கட்கு மகிழ்வூட்டி யுள்ளனர். மேலும் அவர் 'கிரேக்கக் கதைகள்' முதற் புத்தகத்தையும், 'இன்பச் சுவைக் கதைகள்' என்ற தலைப்பில் இரண்டு புத்தகங்களையும் 'இன்பவேள்' என்ற புனைபெயரில் எழுதியுள்ளனர்.

**கதை இன்பம் 12 புத்தகங்கள்**

'கதை இன்பம்' என்ற தலைப்பில் தாமே தம் சிந்தனையில் தோன்றிய 570 சிறு கதைகளைக் கற்கும் இளைஞர்கட்கு இன்பம்

ஊட்டும் வகையிலும் நீதி புகட்டி நெறிப்படுத்தும் வகையிலும் உணர்ச்சியைப் பெருக்கி நற்றொண்டு புரியத் தூண்டும் வகையிலும் இவ்வாசிரியர் எழுதியிருப்பது மிகவும் போற்றுதற்குரியது.

**புலவர் நகைச்சுவை**

நூல்களிலும், செய்தி இதழ்களிலும், தனிப்பாடல்களிலும் புலவர்களிடம் கண்டும் கேட்டும் தாம் நினைவிற் கொண்ட நகைச்சுவைத் துணுக்குச் செய்திகளைப் படிப்பவர்க்கு வியப்பும் உள்ள வுவகையும் தரும் வகையிலும் நகைச்சுவை ததும்பும் வகையிலும் இவ்வாசிரியர் எழுதியுள்ளனர். 108 பக்கங்களைக் கொண்ட இந் நூலில் 'ஓதுவதொழியேல்' முதல் 'தையல் இலை' இறுதியாக 119 இனிய தலைப்புகளில் புலவர்களிடையே நிகழ்ந்த நகைச்சுவைச் செய்திகளை அணி பெறக் கண்டு இன்புறலாம்.

**பஞ்சதந்திரக் கதைகள்** (தூய தமிழ் நடையில்)

திரு தாண்டவராய முதலியார் தமிழில் மொழிபெயர்த்து எழுதிய பஞ்சதந்திரக் கதைகள் வடமொழி கலந்த நடையில் அமைந்துள்ளனவென்பதை யாவரும் அறிவர். ஆனால், அக் கதைகளைச் செந்தமிழ் நடை பரவிவரும் இக் காலத்தில் தமிழ் மக்கள் அயர்வின்றி விரும்பிப் படிக்க வேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன் அந்நூலிற் காணும் வடமொழிச் சொற்களுக்கேற்ற தூய செந்தமிழ்ச் சொற்களைப் பெய்து பொருள் சிதைவுறாமலும் கருத்தோட்டமுடையதாகவும் இனிய நடையில் எழுதுமாறு திரு இராமசாமிப் புலவரை யான் வேண்டிக் கொண்டபடி அவரும் எழுதியுதவினார்.

அதேபோல அருளுள்ளம் படைத்த மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள் இயற்றிய பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி சரித்திரம், பெண்கல்வி பெண்மதிமாலை ஆகிய மூன்று நூல்களும் வடமொழி கலந்த நடையிலுள்ளன. பழந்தமிழ் இலக்கியங்கள் பயிலப் பெறாமலும், உரைநடை நூல்கள் மிகுதியாக எழுதப்பெறாமலும் இருந்த காலமாதலால் அக் காலத்தில் எழுதப்பெற்ற உரைநடை நூல்களில் வடமொழிச் சொற்கள் மிக்கு விரவி யிருந்தன. அச் சொற்கட்கு நேர்பொருள் தெரிய முடிவதில்லையாயினும் இடம் நோக்கி ஒரு வகையான பொருள் தெரியக்கூடியதா யிருக்கும். அந் நூல்கள் மூன்றிலுமுள்ள வடசொற்களை நீக்கி அவற்றிற்கேற்ற செந்தமிழ்ச் சொற்களைப்

பெய்து எழுதுமாறு திரு புலவரை வேண்டவே அவரும் இசைந்து கதைப் பொருள் சிதைவுறாதபடி செந்தமிழ் நடையில் எழுதித் தந்தனர். அதன்பின் அந் நூல்கள் மூன்றும் மக்களால் விரும்பிப் படிக்கப் பெற்றன எனின் அது மிகை யாகாது. அப்படி அம் மூன்று நூல்களையும் தனித் தமிழ் நடையில் வெளியிட்டதைத் தமிழ் அறிஞர் சிலர் குறை கூறுவாராயினர். அவர்கட்குத் தனித்தமிழ் வளர்த்த மறைத் திரு மறைமலையடிகளார், முதுபெரும் புலவர் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் ஆகிய இருபெரும் புலவர்களின் தனித் தமிழ்க் கொள்கையினை எடுத்து விளக்கிச் செந்தமிழ்ச் செல்வியில் எழுதி அறிவு கொளுத்த வேண்டியதாயிற்று.

மறைத்திரு மறைமலையடிகளார் தமது தொடக்க காலத்தில் எழுதிய நூல்களில் வடமொழிச் சொற்கள் மிக்கு விரவியிருந்தன. அவர்கட்குச் சைவசித்தாந்தத்தைச் செவி யறிவுறுத்திய ஆசிரியர் சைவசித்தாந்த சண்டமாருதம் சோம சுந்தர நாயகர் எழுதிய நூல்கள் யாவற்றிலும் வடமொழிச் சொற்கள் அளவிறந்து காணப்பெறும்.

1920ஆம் ஆண்டிலேதான் மறைத்திரு மறைமலையடி களார் 'வடமொழிச் சொற்களால் தமிழ்மொழிக்கு ஏற்பட்ட பொல்லாங்கினை யாம் இப்போதுதான் உணர்ந்தேம்' என்று கூறி அது முதல் வடமொழி கலவாமல் தூய தமிழில் பேசுதல் வேண்டுமென்றும், நூல்கள் எழுதுதல் வேண்டுமென்றும் உறுதி பூண்டனர். அங்ஙனமே தூய தமிழில் நூல்கள் எழுதியும், பேசியும் வந்தனர். கலவை நடையில் முன்னமே எழுதி அச்சிட்டு வெளிப்படுத்திய நூல்களைத் திரும்பப் பதிக் குங்கால் அவற்றிலுள்ள வடமொழிச் சொற்கட்குத் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்து படிப்பதற்கு அயர்வு ஏற்படாமல் சுவை கெழுமப் பதிக்கலாயினர். அவைகளில் அடிகளார் பேசும் போதும் வடசொற் கலவாமலும் பிற மொழிச் சொற் கலவா மலும் இனிமை ததும்பக் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்ப் பேசி வந்தனர். அங்ஙனம் வட சொற்களை நீக்கித் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்துள்ள முற்பதிப்பு நூல்களைச் சென்னை மறைமலையடிகள் நூல்நிலையத்திலும் பல்லவபுரம் மறைமலையடிகள் கலைமன்றத்திலும் அமைக்கப் பெற்றுள்ள நூற் காட்சியிற் கண்டு மகிழலாம்.

முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியா ரவர்கள் பல சமய மாநாடுகளிலும் இலக்கிய மாநாடுகளிலும் ஆற்றிய தலைமையுரைகளையும், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்

பொழில் முதலிய இதழ்களில் எழுதிய கட்டுரைகளையும் தொகுத்து நூல்வடிவில் அச்சிட்டுத் தருமாறு என்னிடம் ஒப்பு வித்தனர். மதிப்புக்குரிய பண்டிதமணி யவர்களிடம் 'ஐயா, தங்களுடைய கட்டுரைகளில் வடசொற்கள் மலிந்து கிடக்கின் றனவே, அவற்றை அப்படியே அச்சிட என் மனம் இசைய வில்லையே'' என்று கூறினேன். அவர்கள் தம் கட்டுரைகளி லுள்ள வடசொற்களை நீக்கித் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்து அச்சிடுதற்குத் தமக்குப் பெருவிருப்பமே என்றும், இறுதி மெய்ப்பினை மட்டும் தமக்கு அனுப்பி வைத்தல் வேண்டு மென்றும் சொன்னார்கள். அதுபோது திரு இளவழகனாரவர்கள் கழகப் புலவராக அமர்ந்து கழகத்திலே புலமைத் தொண்டு புரிந்து வந்தார்கள். அவர்களும் யானுமாக கட்டுரைகளி லுள்ள வடசொற்களை நீக்கித் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்து சமய மாநாட்டுத் தலைமையுரைகளை யெல்லாந் தொகுத்து 'உரைநடைக் கோவை (சமயம்) என்ற தலைப்பிலும். இலக்கிய மாநாட்டுத் தலைமையுரைகளையும், கட்டுரைகளையும் தொகுத்து உரைநடைக் கோவை (இலக்கியம்) என்ற தலைப்பிலும் இரண்டு நூல்களை அழகியவாய் அச்சிட்டுக் கொடுத்தோம். அவற்றைக் கண்டு என் பெருமதிப்புக்கும் பேரன்புக்குமுரிய பண்டிதமணி யவர்கள் பெரிதும் போற்றி மகிழ்வுற்றனர். அவற்றில் உரை நடைக் கோவை (இலக்கியம்) பல்கலைக்கழகத்தின் இடைநிலைக் கலைத் தேர்வுக்கு இரு முறை பாடமாக அமைக்கப் பெற்றது.

பண்டிதமணி யவர்களைப் போல அருளாளர் வேதநாயகம் பிள்ளை யவர்களும் கால நிலைக்கேற்பத் தாம் எழுதிய நூல்களைத் திரும்ப அச்சிடும்போது வடசொற்களை நீக்கித் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்து செந்தமிழ் நடையில் ஆக்கப் பெறுவதைப் பெரிதும் போற்றிப் புகழ்வார்கள் என்பதில் எட்டுணையும் ஐயுறுதற்கில்லை ஆனல், வடமொழியைக் கல்லாமலே செந் தமிழ்ச் சங்க இலக்கியங்களைப் பதித்த முதுபெரும் புலவர் டாக்டர் சாமிநாதையரவர்கள் 'வடமொழிக் கலப்பால் தமிழ் கெட்டுவிட்டதென்று சிலர் கூறுவர் என்றும், வடமொழிக் கலப்பால் தமிழ் மேன்மையுற்றதென்பது பெரியோர் கொள்கை' என்றும் கூறியதுபோல் ஒருகாலும் அருளாளர் வேதநாயகம் பிள்ளை அவர்கள் கூறமாட்டார் என்பது உறுதி.

## தனிப்பாடல் திரட்டு 5 புத்தகங்கள்

மிகுபல தனிப்பாடல்கள் நூல் வடிவில் பதிக்கப் பெற வில்லை என்பதை யான் உணர்ந்து திரு இராமசாமிப் புலவரே அதனை எனது எண்ணப்படி செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்

தவர் என்று கருதினேன். அவரிடம் அதனைச் செய்து முடிப் பதற் கேற்ப முன் வெளிவந்த தனிப்பாடல் திரட்டு 2 பகுதிகள், தனிச் செய்யுள் சிந்தாமணி, சிறிதும் பெரிதுமாகவுள்ள இரண்டு புத்தகங்கள், வெள்ளக்கால் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களைப் போல புலவர் சிலர் எழுதிய தனிப்பாடல் நூல்களையும் எடுத்துக் கொடுத்தேன். செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ் முதலிய இதழ்களில் வெளிவந்துள்ள தனிப் பாடல்கள் நூல் வடிவில் வெளியிடப் பெறவில்லை என்பதையும் எடுத்துக் கூறினேன். திரு புலவரும் எனது வேண்டுதலை ஏற்றுத் தனிப்பாடல் திரட்டு ஐந்து புத்தகங்களில் 619 புலவர்கள் பாடிய 5089 பாடல்களைத் தொகுத்துக் குறிப்புரையும் வரைந்து தந்து மகிழ்வூட்டினர். மேலும் அவர் தொகுத்து வைத்திருக்கும் தனிப்பாடல்கள் 6 ஆவது புத்தகத்தில் இடம் பெறும்.

இத்திரட்டு நூல்களை வெளியிடுதற்கு வாயிலாக விருந்த தனிப்பாடற்றிரட்டு நூல்களைப் பற்றித் தெரிந்து கொள்வது நன்றிக்குரிய செயலாகும்.

இராமநாதபுரத்தில் பெரும் புலவராக விருந்த பொன்னு சாமித் தேவர் தம் மீது புலவர் பலர் பாடியுள்ள தனிப் பாடல் களையும் பிற தனிப்பாடல்களையும் திரட்டி நூல் வடிவில் வெளி யிடும்படி சந்திரசேகர பண்டிதர் என்னும் பெரும் புலவரைக் கேட்டுக் கொண்டார். அவரும் அவ்வாறே பல இடங் களினும் சென்று தனிப்பாடல்களைத் திரட்டித் தனிப்பாடற் றிரட்டு என்னுந் தலைப்பில் இரண்டு நூல்களை அச்சிட்டு வெளி யிட்டார். அவையே மீண்டும் மீண்டும் சிலரால் பதிக்கப் பெற்றன. பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் அவற்றிற்கு விளக்கவுரை எழுதியுள்ளனர். அவை இரத்தின நாயகர் குமாரர் பதிப்பகத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளன. பின்னர் முறையூர் வள்ளல் மு. சண்முகஞ் செட்டியாரும், கொட்டாம்பட்டி கறுப்பையாப் பாவலரும் தொகுத்த தனிப் பாடல்களுக்குத் 'தனிச் செய்யுட் சிந்தாமணி' என்ற பெயரிடப் பெற்றது. பிறகு மதுரையில் வாழ்ந்த மு. ரா. கந்தசாமிக் கவிராயர் தனிப் பாடல்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டு மேலும் முந்நூறு பாடல்களைத் திரட்டினர். முன் சிறிய அளவில் வெளிவந்த தனிச்செய்யுட் சிந்தாமணியிலுள்ள பாடல்களோடு தாம் திரட்டிய பாடல்களையுஞ் சேர்த்துப் பெரிய அளவில் தனிச்செய்யுட் சிந்தாமணி வெளியிடப்பட்டது. இவற்றில் இல்லாத பல பாடல்கள் செந்தமிழ் முதலிய பழைய இதழ்களில் வெளிவந்துள்ளன. இக் காலத்தில் வாழும்

புலவர்கள் பாடிய தனிப் பாடல்கள் நூல் வடிவில் வாராமலிருக்கின்றன அவற்றையெல்லாம் திரட்டினால் இன்னுஞ் சில தனிப்பாடல் திரட்டு நூல்கள் வெளியிடப் பெறலாம்.

இப்போதும் தனிப்பாடல்கள் கிடைக்கப்பெறும் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பேராசிரியர் நாவலர் சோமசுந்தர பாரதியாரவர்களின் மருமகனுர் திரு எல். கிருஷ்ணசாமி பாரதி, எம்.ஏ., பி எல்., தம் அருமைத் திருமகனுர் கி. இலட்சுமி காந்தன் பாரதி, ஐ.ஏ.எஸ்., அவர்கள் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணி ஏற்றபோது தமது சிற்றூரிலிருந்து வாழ்த்தி எழுதிய வாழ்த்துப் பாக்கள் மூன்றும் அடியிற் காண்க. அவை தனிப் பாடல் திரட்டிற் சேர்ப்பதற்கு மிக மிகப் பொருத்தமுடையனவாகும் என்பது நன்கு புலப்படுகின்றது.

### (அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

1. சாந்தத்தின் உருவம் பெற்றாய்
   சால்பெலாம் சமையப் பெற்றாய்
   தீந்தமிழ் மதுரை மூதூர்
   மாவட்டத் தலைமை யேற்றாய்!
   காந்தத்தின் தன்மை யொப்பக்
   கவர்ந்திடும் பெற்றி பெற்றாய்!
   காந்தனே பெற்றே னுன்னைக்
   கடவதொன் றிதன்மே லுண்டோ?

2. உன்பெயர் உன்ன தாக்கி
   ஒள்ளிபன உன்னைப் பெற்ற
   என்பெயர் என்ன தாக்கி
   யீன்றதாய்க் கேற்ற மாக்கிப்
   பொன்பெயர் முன்னோர்க் காக்கிப்
   புகழெலாம் பெற்றுத் தந்தாய்
   என்தவம் பலித்த தையா
   யினிதுநீ நெடிது வாழ்க!

3. நல்லநன் மகனைப் பெற்றேன்
   நாட்டினுக் குழைக்கத் தந்தேன்!
   நல்லவர் ஆட்சி தன்னில்
   நற்பணி புரிதல் கண்டு
   நல்லுரை வழங்க லுற்றார்
   நம்மக்கள் நலமே பெற்றார்
   நல்லவை செய்தார்க் கெல்லா
   நன்மையும் பெருகு மம்மா!

**பன்னூல் பாடற்றிரட்டு**

மதுரைத் தமிழ்ச்சங்கத்தை நிறுவிய இராமநாதபுரம் பாண்டித்துரைத் தேவரவர்கள் தமிழ்ப் புலவராகவும், தமிழ்ப் புரவலராகவுமிருந்தார். சொற்பொழிவாளர்கட்கும் கட்டுரை எழுதுவார்க்கும் பயன்படும் வகையில் அறம் பொருள் இன்பச் செய்திகளமைந்த அற நூல்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலிய நூல்களிலிருந்து திருக்குறளைப் போல் அகரவரிசைப் படுத்தி 51 அதிகாரங்களாக வகுத்தார். அவற்றில் அடங்காத பிற பாடல்களையெல்லாம் 'ஒழிபு' என்ற தலைப்பில் சேர்த்துள்ளனர். பன்னூற்றிரட்டு என்ற தலைப்புடைய நூலின் முதற் பதிப்பு 1898ஆம் ஆண்டும் இரண்டாம் பதிப்பு 1906ஆம் ஆண்டும் வெளிவந்தன. மூன்றும் பதிப்பு மட்டும் சில மாறுதல்களுடன் வெளியிடப் பெற்றது. இம் மூன்று பதிப்புகளிலும் பாடல்கள் சீர்பிரிக்கப் பெறவில்லை.

அன்பர் சிலர் விரும்பியவாறு கழகவழித் திரட்டு நூல் ஒன்றை வெளியிடுவான் கருதித் திரு இராமசாமிப் புலவரை வேண்டவே அவர் மேற்கண்ட மூன்று பதிப்புகளிலும் இல்லாத சில புதிய தலைப்புக்களில் ஏறக்குறைய 70 நூல்களிலிருந்து 852 பாடல்களைப் பொறுக்கி எடுத்துச் சேர்த்துத் தந்தனர். 'பன்னூற்றிரட்டு' என்ற பெயர் நூலுக்குப் பொருத்தமில்லை என்பதை யுணர்ந்து 'பன்னூல் பாடற்றிரட்டு' என்ற பொருத்தமான நூல் தலைப்பினை அமைத்து வெளியிட்டோம். பொருள் விளக்கம் கொடுக்க வேண்டிய பாடல்கட்குக் கழகப் புலவராயிருந்த திரு தி. சங்குப் புலவரவர்கள் எழுதிய குறிப்புரை பின் இணைப்பாகச் சேர்க்கப் பெற்றுள்ளது. இவ்வரிய தொகுப்பு நூல் திரு இராமசாமிப் புலவர் பெரு முயற்சியினால் உருவாகியது என்று சொன்னால் அது மிகையாகாது. குறிப்புரையோடு கூடிய இத் திரட்டு நூல், நூல் எழுதுபவர்கட்கும் அவைகளில் பேசுபவர்கட்கும் பெரிதும் பயன்படுகின்றது.

**சிலேடை அகரவரிசை**

இத் தலைப்பிலே முதன் முதல் கழகவழி வெளியிடப் பெற்ற இந்நூல் அறிஞர் பெருமக்களால் பெரிதும் போற்றப் பெறுகின்றது. இந்நூலைத் தொகுப்பதற்குக் கலைசைச் சிலேடை வெண்பா, சிங்கைச் சிலேடை வெண்பா, நெல்லைச் சிலேடை வெண்பா முதலிய 14 சிலேடை வெண்பா நூல்களையும் திருவரங்கச் சிலேடை மாலை, சந்திர விலாசம், சமுத்திர விலாசம்,

யமக வந்தாதிகள் கலம்பகங்கள், தனிப்பாடற்றிரட்டு நூல்கள், சோழவந்தான் அரசஞ் சண்முகனார் இயற்றிய ஏகபாத நூற்றந்தாதி முதலிய பல நூல்கள் ஆசிரியர் இராமசாமிப் புலவர்க்குத் துணை புரிந்தன. அந்நூல்களிலும் பேச்சு வழக்கிலுமுள்ள மூவாயிரத்துக்கு மேற்பட்ட சிலேடைச் சொற்களையும் தொடர்களையும் திரட்டி அகரவரிசைப் படுத்திப் பொருள் விளக்கத்துடன் இந் நூலாசிரியர் படைத்திருப்பது பாராட்டுதலுக்குரிய பெருந் தொண்டாகும்.

சிலேடை என்பது இரு பொருள்பட, முப்பொருள்பட இசைக்குஞ் சொல்லும் சொற்றொடருமாகும். அச் சொற்களையோ சொற்றொடர்களையோ விரித்துக் கூறுங்கால் கேட்பார்க்கு மிக்க உவகை துளும்பி உள்ளக் களிப்பு உண்டாகும். சிலேடை 'செம்மொழிச் சிலேடை' எனவும் 'பிரிமொழிச் சிலேடை' எனவும் இருவகைப்படும். செம்மொழிச் சிலேடையாவது சொற்கள் நின்றவாறே நிற்க இருபொருள் படுவது. பிரிமொழிச் சிலேடையாவது சொற்களைப் புணர்ச்சி வகையிற் பிரித்துப் பல பொருள் காண்பது. இத்தகைய சீரிய நிலை மொழிவளர்ச்சியின் தொன்மையினையும் இலக்கண இலக்கியப் பன்மையினையும் அம் மொழிக்குரிய தனிப் பேராற்றலையும் விளக்குவதாகும். நம் தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றி இன்றுகாறும் இருவகை வழக்கிலும் நின்று நிலவி வளர்ச்சி பெற்று வரும் தனிப்பெரு மொழியாகும். வேறெம்மொழியினுங் காணப்படாத சிலேடை, மடக்கு, விடுகவி, மரபு, பழமொழி, உவமை முதலியன தமிழ் மொழியிற் காணப்படுவதை மேனாட்டறிஞர்கள் வியந்து பாராட்டுகின்றனர்.

**இந்நூல் தொகுப்பாசிரியர் கூறுவது :**

"இத்தகைய நூலுக்கும் இதைப் போன்ற பல சீரிய நூல்கட்கும் அடிப்படையான திட்டம் வகுக்கும் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு வ. சுப்பையா பிள்ளை யவர்களின் கூரிய நுண்ணறிவு எல்லாராலும் நன்கு பாராட்டக் கூடியதாகும்."

**இதற்கு அணிந்துரை நல்கிய பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ., எம்.லிட்., கூறுவது :**

"கருப்பக்கிளர் திரு சு. அ. இராமசாமிப் புலவர் ஆக்கிய நூல்களை யெல்லாம் கவினுற அச்சிட்டுக் கொள்வோர் கொள்வகை அறிந்து அழகிய கட்டுக்களில் நாட்டுக்கு நல்கிய பெருமை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாருக்கும், சிறப்பாக

அதன் ஆட்சியாளர் திரு வ. சுப்பையா பிள்ளையவர்களுக்குமே உண்டு.''

அதன் இரண்டாம் பதிப்புக்கு முந்நூற்றுக்கு மேற்பட்ட சிலேடை மொழிகளைத் திரு இராமசாமிப் புலவர் சேர்த்துத் தந்திருக்கின்றனர்.

**திருக்குறள் சொற்பொருள் அகரவரிசை**

1924 ஆம் ஆண்டில் சென்னையில் திரு பா. மார்க்கசகாயஞ் செட்டியார் 'திருக்குறள் சொற் குறிப்பகராதி' என்ற தலைப்பில் சிறிய அளவில் திருக்குறளைக் கீழ் மேலாகப் புரட்டிப் படிப்பதற் கேற்பவும் மேற் பக்கம் 5 குறட்பாக்களும் கீழ்ப்பக்கம் 5 குறட்பாக்களுமாக ஒரே பார்வையில் படிக்குமாறு அமைத்துப் பதித்துள்ளனர். பின் இணைப் பாகப் பாட்டு முதற்குறிப்பகராதி யும், திருக்குறளில் காணப் பெறும் சொற்களை யெல்லாந் தொகுத்து அகரவரிசைப் படுத்திச் சொல்லகராதியும், திருக் குறட் பாக்கள் சிலவற்றிற்கு அவற்றின் பொருளுக்கு ஒப்புமைப் பொருளுடைய குறட்பாக்களை எதிரே அவ்வக் குறள் எண் களையே அமைத்து 'ஒப்புமைக் குறள் அட்டவணை' சேர்த் திருப்பதும் மிகவும் போற்றுதற்குரியது. திரு மார்க்கசகாயஞ் செட்டியாரும் அவர் திருமகனார் முத்துக்குமாரசாமி செட்டியாரும் காலமானபின் திரு முத்துக்குமாரசாமி செட்டியாரின் துணைவி யாரிடமிருந்து திருக்குறள் சொற்குறிப்பகராதியின் உரிமை விலை கொடுத்து வாங்கப் பெற்றது. அதனை அப்படியே பதிப் பிடுவதை விடச் சொற்களுக் கெல்லாம் பொருள் எழுதித் திருக் குறள் தெளிவுரையைப் போல் வெளியிட விரும்பினேன். திரு இராமசாமிப் புலவர் திருக்குறளிற் பயிலப் பெறும் 4463 சொற் களுக்கும் பொருள் எழுதியுள்ளனர். சில சொற்களுக்கு இரண்டு மூன்று பொருள்கள் உள. அவ்வப் பொருள்களை யடுத்து அப் பொருள் குறிக்கும் குறள் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. தெளிவுரையைப் போன்ற அளவில் பக்கத்துக்கு ஓரதிகாரம் அமையும்படி பதிக்கப்பெற்றுள்ளது. கழகப் பதிப்பில் பாட்டு முதற் குறிப்பகராதியும், ஒப்புமைக் குறள் அட்டவணையும் பின் இணைப்பாகச் சேர்க்கப் பெற்றுள்ளன. 1330 குறட்பாக்களில் 443 குறட்பாக்களுக்கு மட்டுமே ஒப்புமைக் குறள்கள் உள்ளன. சில குறட்பாக்கட்கு ஒப்புமையுடைய ஒரே குறளும், சிலவற்றிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்புமையுடைய குறட்பாக்களும் உள்ளன. அவை குறள் எண்களால் குறிக்கப் பெற்றுள்ளன. இந்நூல் திருக்குறள் ஆராய்ச்சியாளர்கட்குப் பெரிதும் பயன்படும் சீரிய பதிப்பாகும்.

## மேற்கோள் விளக்கக் கதைகள் 2 பகுதிகள்

தமிழ் இலக்கிய நூல்களிலும் உரை நூல்களிலும் பல கதைகள் மேற்கோளாகக் குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றை யெல்லாம் திரு இராமசாமிப் புலவர் அரிதின் முயன்று திரட்டி 1206 பக்கங்களில் 1255 கதைகளை இரண்டு பகுதிகளில் வெளி யிட்டிருப்பது பெரிதும் போற்றுதற் குரியது. கதைகள் எவ்வெந் நூல்களில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன என்பதும் குறிக்கப்பட்டுள்ளது. பின் இணைப்பில் 'பொருள் விளக்கம்' என்ற பெருந் தலைப்பில் அரசர் கதைகள், இராமாயண கதைகள், உலக வழக்குக் கதைகள், கந்தபுராணக் கதைகள், காப்பியக் கதைகள், திருவிளையாடற் புராணக் கதைகள், பல வகைக் கதைகள், பாகவதக் கதைகள், பாரதக் கதைகள், புராணக் கதைகள், புலவர் கதைகள், பெரியபுராணக் கதைகள், முனிவர் கதைகள், வள்ளல்கள் கதை என்ற 14 தலைப்புகளில் கதைகளின் பெயர்கள் அகரவரிசையில் அமைக்கப் பெற்றிருக் கின்றன. நூலின் இறுதிப் பக்கத்தில் எடுத்தாளப்பட்ட நூல் களின் பெயர்கள் அகரவரிசையில் பதிக்கப் பெற்றிருக் கின்றன. இத்தகைய தொகுப்புநூல் தமிழ் நூலாய்வார்க்கும் உரை எழுதுவார்க்கும் நன்கு பயன்படுவதாகும். இத்தொகுப்பு நூற்குப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர் அணிந்துரை வழங்கியிருப்பது நனிமிகச் சிறப்பு நல்குவதாகும்.

## டாக்டர் மு. வரதராசனர் எழுதிய அணிந்துரையில் கூறுவது

*"இக் கதைகள் யாவும் எளிய நடையில் நல்ல தமிழில் அமைந் துள்ளன. பல கதைகள் சுருக்கமாக உள்ளபோதிலும் வேண்டுமன விற்குத் தெளிவு பெற்றுள்ளன. தமிழ் நூல்கள் தரும் குறிப்புக் களைக் கொண்டு எந்த அளவிற்குக் கதை வடிவு தரமுடியுமோ அந்த அளவிற்கு மேற்படாமல், தாமாகப் புதியன புகுத்தித் திரிக்காமல் கற்பவர்க்குப் பயன்படும் வகையில் தந்துள்ளார். கதைகள் எந்தெந்த நூலில் மேற்கோளாகச் சுட்டப் பட்டுள்ளன என்பதற்கு உரிய குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. கதைகள் புகட்டும் நீதிகளும் ஆங்காங்கே தீட்டப்பட்டுள்ளன."*

## உரைநடை நூல்கள்

திரு இராமசாமிப் புலவர் எழுதிய உரைநடை நூல்கள் அடியில் வருமாறு.

சூளாமணி வசனம், கோவலன், அரிச்சந்திர புராண வசனம், கம்பராமாயண வசனம் (2 பகுதிகள்) வில்லிபாரத வசனம், விநாயக புராண வசனம், ஓவியக் கலைஞர், திருத்

தணிகை வரலாற்றுச் சுருக்கம், எழுத்தாளர்களும் பதிப்பகங்களும் என்பன.

இவற்றுள் எழுத்தாளர்களும் பதிப்பகங்களும் என்ற நூலின்கண் எழுத்தாளர்கட்கும் பதிப்பாளர்கட்கும், அச்சுக் கூடத்தார்க்கும், இதழாசிரியர்கட்கும், பிழை திருத்துவோர்க்கும், அச்சுப் பொறி வினைஞர்கட்கும், நூற் கட்டடஞ் செய்வோர்க்கும் இன்றியமையாது வேண்டப்பெறுங் குறிப்புகள் அடங்கியுள்ளன. இலக்கணப் பிழைகள், நிறுத்தற் குறிகள், எழுத்துக்களின் வகையும் அளவும் தெளிவுறக் கொடுக்கப் பெற்றிருக்கின்றன. தமிழ் நூல்கள் செவ்வியுறப் பதிக்கப் பெறுதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

காளிதாசர் வடமொழியில் இயற்றிய மேகசந்தேசம், சகுந்தலை, மாளவிகை, விக்கிரமோர்வசி, குமாரசம்பவம், இரகுவமிசம் ஆகிய ஆறு நூல்களின் கதைகளை இவர் இனிய செந்தமிழ் நடையில் மாணவர் விரும்பிப் படிக்கும் வகையில் அமைத்திருக்கின்றனர்.

இவர் உரை எழுதிய நூல்கள் வருமாறு: அருட்டிரு சிதம்பர அடிகள் அருளிய திருப்போரூர் சந்நிதிமுறை, முருகேசர் முதுநெறி வெண்பா, அபிராமி அந்தாதி (2 புத்தகங்கள்) ஆகும்.

இவர் குறிப்புரை எழுதிய நூல்கள் வருமாறு: சிவப்பிரகாச அடிகள் பனுவல்திரட்டு, பதினோராந் திருமுறை, பிரபுலிங்க லீலை ஆகிய மூன்றுமாகும்.

**திருவருட் கதைகள்**

இஃதோர் அரிய தொகுப்பு நூல். நீதிநெறி நின்று ஒழுகி நற்பேறடைந்துய்யும் பொருட்டு நீதிக் கதைகள் எழுதியது ஒரு வகை. சமய வொழுக்கத்தில் வழுவாது நின்று வீடுபேறடைதற்குரிய வழிகாட்டுங் கதைகள் மற்றொரு வகை. நீதி விளக்கக் கதைகள் பலவற்றை எழுதிய ஆசிரியர் இராமசாமிப் புலவர் சமய நெறி நின்று ஒழுகி உய்திபெறும் பொருட்டுச் சிவபுராணங்களிலிருந்து பிள்ளையார் வழிபாட்டாலும், புனித நீராடுதலாலும், திருநீறும் சிவமணியும் அணிந்து திருவைந்தெழுத்தை ஓதுவதாலும், நோன்பிருந்து சிவபூசை செய்வதாலும், சிவனிரவில் நோன்புடன் விழித்திருந்து சிவபூசையாற்றுவதாலும், திருக்கோயிற் பணி செய்வதாலும் வீடுபேறு கிடைக்கும் என்பதை விளக்கி 332 பக்கங்

களில் 88 கதைகளை எளிய இனிய செந்தமிழ் நடையில் இதன் கண் எழுதியுள்ளார். இது சைவசமய நன்மக்கட்கு வீடு பேறளிக்கும் சீரிய சிவநெறி நூலாகும்.

## தமிழ்நாட்டு வள்ளல்கள் 2 புத்தகங்கள்

பாரி, பேகன் முதலிய சங்ககால வள்ளல்களைப் பற்றிப் படித்திருக்கிறோம். சங்ககால வள்ளல்கள் முதலெழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள் கடையெழு வள்ளல்கள் என மூன்று வகையாக வகுக்கப்பட்டிருப்பினும் மற்றும் எத்தனையோ வள்ளல்கள் இருந்தனர் என்பது பழந்தமிழ்ப் பனுவல்கள்வழி அறிகிறோம் முற்கால வள்ளல்களைப் போல் இக் காலத்திலும் வள்ளல்கள் பலர் தோன்றி வியப்புறத்தக்க அறச் செயல்களைச் செய்துள்ளனர். அவர்களைப் பற்றி யெல்லாம் நம் மக்கள் அறியும்பொருட்டுத் தமிழ் நாட்டு வள்ளல்கள் என்ற தலைப்பில் இரண்டு புத்தகங்களை எழுதுமாறு இராமசாமிப் புலவரை வேண்டினேன். அவரும் அதற்கிணங்கி அலைந்து தேடிக் குறிப்புகளைத் தொகுத்து முதற் புத்தகத்தில் சடையப்ப வள்ளல் முதல் முறையூர் சண்முகஞ் செட்டியார் ஈருகப் பதினறு வள்ளல்களைப் பற்றியும், இரண்டாவது புத்தகத்தில் தீ நா முத்தையா செட்டியார் முதல் புண்ணியகோட்டி முதலியார் ஈருகப் பதினறு வள்ளல்களைப் பற்றியும் எழுதி எனது எண்ணத்தை நிறைவேற்றியமைக்கு எழுமையுங் கடப்பாடுடையேன்.

## தமிழ்ப்புலவர் வரிசை 30 புத்தகங்கள்

இவ்வரிசையில் 1947 ஆம் ஆண்டு முதல் இதுகாறும் 30 புத்தகங்களில் 770 புலவர் வரலாறுகளை அரிதின் முயன்று எழுதி வெளியிட்டுள்ளனர். முதற்கண் வெளியிட்ட சில புத்த கங்களில் ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர், காளமேகப் புலவர் போன்ற பழம் புலவர் வரலாறுகளை எழுதியுள்ளனர். பின்னர் வெளியிட்ட புத்தகங்களில் கிடைக்கப் பெறும் மறைந்த பழம் புலவர் வரலாறுகளையும் அவ்வப்போது மறைந்து வரும் புலவர் வரலாறுகளையும் முயன்று பெற்று எழுதுவாராயினர். 1972 நவம்பரில் வெளிவந்த தமிழ்ப் புலவர் வரிசை 30 ஆவது புத்தகத்தில் பல ஆண்டுகட்கு முன் மறைந்த புலவர் சிலர் வரலாறுகளோடு அண்மையில் மறைந்த கழகப் புலவர் ப. இராமநாதபிள்ளை, தணிகைமணி செங்கல்வராயபிள்ளை, ச. சச்சிதானந்தம்பிள்ளை, பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை, புலவர் குழந்தை, அறிஞர் அண்ணாத்துரை, நாமக்கல்

கவிஞர், பெருமழைப் புலவர் சோமசுந்தரனார் ஆகியோர் வரலாறுகளும் சேர்ந்து இருபத்தெண்மர் வரலாறுகள் இடம் பெற்றுள்ளன.

தமிழகத்தில் வேங்கடமுதல் குமரி வரையுள்ள ஊர்களி லுள்ள நூல் நிலையங்கட்கெல்லாஞ் சென்று புலவர் வரலாறுகள் எழுதுவதற்குக் குறிப்புகளைத் தொகுத்ததோடு பழங்கதைகள் முதலியவற்றையுந் தொகுத்தனர். இரங்கற் பாக்கள், மலர்கள் முதலியவற்றிலிருந்தும், தனித்தனியே வெளியிடப் பெற்ற புலவர் வரலாறுகள், இலங்கையில் வெளியிடப் பெற்ற பாவலர் சரித்திர தீபகம், ஈழநாட்டுப் புலவர்கள், அ. குமாரசாமிப் புலவர் எழுதிய புலவர் சரித்திரம் முதலிய நூல்களிலிருந்தும் குறிப்புகளை எடுத்தும் புலவர் வரலாறுகளை எழுதி வருகின் றனர். புலவர் சிலர் வரலாறுகளை அவரவர்கள் நண்பர்கட் கெழுதிப் பெற்றும் எழுதினர்.

1944 இலும் 1957 இலும் தமிழகத்திலே வாழ்ந்து வந்த புலவர்கட்கெல்லாம் அவரவர்கள் வரலாறுகளை எழுதி அனுப்பு மாறு முத்திரை ஒட்டிய கூடு வைத்துக் கடிதம் எழுதி வேண்டி னோம். அங்ஙனம் வேண்டியதில் இருநூறுக்கு மேற்பட்டவர் களிடமிருந்து வரலாறுகள் வரப்பெற்றோம்.

மேலும் விரிவாகக் கிடைக்கப் பெருமலுள்ள புலவர்களின் வரலாறுகளை அவரவர்கள் எழுதிய நூல்களிலிருந்து குறிப் புகளை எடுத்துத் தமிழ்ப் புலவர் அகரவரிசை என்ற தலைப்பில் 1642 பக்கங்களில் 5 புத்தகங்கள் வெளியிட்டுள்ளோம். அவற்றின்கண் 2634 புலவர் சுருக்க வரலாறுகள் அகரவரிசை யில் அமைந்துள்ளன. அப் புலவர்கள் எழுதிய நூல்களை யெல்லாம் அகரவரிசைப் படுத்தி 348 பக்கங்களில் ஆறுவது புத்தகமாக வெளியிட்டிருக்கிறோம். திரு இராமசாமிப் புலவர் தமிழ்ப்புலவர் வரலாறுகளைத் தொகுப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிக்குக் கழகமும் தமிழுலகும் நன்றி செலுத்துங் கடப்பா டுடையன.

## சிறப்புப் பெயரகராதி

இந்நூலைப்போல முன்பு வெளிவந்தவை அபிதான கோசம், அபிதான சிந்தாமணி, ஈக்காடு இரத்தினவேல் முதலியார் எழுதிய சிறப்புப் பெயரகராதி என்பனவாகும். இம் முறையில் அபிதான சிந்தாமணி மிகப் பெரிய நூலாகும். அதனைத் தொகுத்த காலத்தில் தமிழிலே நாட்டு வரலாற்று

நூல்களோ; புலவர் வரலாற்று நூல்களோ, கல்வெட்டாராய்ச்சி நூல்களோ மிகுதியாக வெளிவரவில்லை. எனவே, அபிதான சிந்தாமணியை அப்படியே அச்சிடுவதும் பயனுடையதாகாது. பிற்காலத்தில் வெளிவந்துள்ள வரலாற்று நூல்களிலுள்ள சிறப்புப் பெயர்களைத் தொகுத்து விளக்கம் எழுதி அபிதான சிந்தாமணியுடன் சேர்ப்பதாயின் நூல் மிகவும் விரிவு பெறும். அதனைத் தொகுப்பதற்கும் அச்சிடுவதற்கும் பெரும் பொருள் செலவிடுதல் வேண்டும். அச்சிட்டபின் அதன் படிகளைப் பாதுகாத்து வைத்து விற்பதற்கும் நீண்டகாலமாகும்.

எனவே, அபிதான சிந்தாமணிக்குப் பின் வந்த சேர சோழ பாண்டிய மன்னர்களின் வரலாறுகளும், நரசிம்ம வர்மன், மகேந்திர வர்மன், குலோத்துங்கர் மூவர் ஆகிய நூல்களும் பிறவும் நிரம்ப வெளிவந்திருக்கின்றன. காட்டிய நூல்கள், குமரிக் கண்டம், மொகஞ்சதரோ, தொண்டை மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம் முதலிய வரலாற்றுச் சதகங்கள், கொங்குதேச இராசாக்கள், வேங்கட முதல் குமரி வரை, திருக்குறள் குமரேச வெண்பா, பாஞ்சாலங்குறிச்சி வரலாறு ஆகிய நூல்களிலுள்ள சிறப்புப் பெயர்களைத் தொகுத்து விளக்கம் எழுதி 'சிறப்புப் பெயரகராதி' என்ற தலைப்பில் கழக அறநிலையங்களுள் ஒன்றாகிய தென்னிந்திய தமிழ்ச் சங்க வெளியீடாக நடுவணரசின் பொருளுதவியுடன் வெளியிடலாயிற்று. இதனை ஆராய்ச்சி யறிஞர்கள் மிகவும் போற்றிப் பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் இதன்கண் இல்லாத சிறப்புப் பெயர்களைக் கழகம் வெளியிட்டிருக்கும் தமிழ்ப் புலவர் வரிசை 30 புத்தகங்கள், அகர வரிசை 5 புத்தகங்கள், சங்ககாலப் புலவர் வரிசை 16 புத்த கங்கள், சங்ககால அரசர் வரிசை 6 புத்தகங்கள், தமிழ்நாட்டு வள்ளல்கள் 2 புத்தகங்கள், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் முதலிய உரைநடை நூல்கள் முதலிய நூல்களி னின்றும் தெரிந்து கொண்டு விளக்கம் பெறலாம். எனவே, அபிதான சிந்தாமணியை அப்படியே வெளியிடக் கழகம் விரும்பவில்லை.

**தென்னாட்டுப் பழங்கதைகள் 1 முதல் 8 புத்தகங்கள்**

இவ்வெட்டு நூல்களிலும் நந்தமிழ் நாட்டில் முன்னமே வழங்கிவந்த 570 கதைகள் இடம் பெற்றிருக்கின்றன. தக்காணத்துப் பூர்வ கதைகள், திராவிடப் பூர்வ காலக் கதைகள், திராவிடர் மத்திய காலக் கதைகள், தென்னாலிராமன்

கதைகள், கதாரத்னவளி போன்ற நூல்கள் அழிந்தொழிந்து போகும் நிலையிலிருந்தன. இவற்றுள் திராவிடர் மத்திய காலக் கதைகள் யாண்டுந் தேடிக் கிடைக்கப் பெறாமல் கீழ்கலைக் கையெழுத்துச் சுவடி நூல்நிலையத்தில் சிதைவு பெற்று ஒதுக்கப்பட்டிருந்தமை தெரிந்து அதனைப் பெற்று உருப்படுத்தி அதினின்றுங் கதைகளைச் செந்தமிழ் நடையில் ஆசிரியர் இராமசாமிப் புலவர் எழுதினர். அவர் முயற்சி செய்யாதிருப்பின் நம் நாட்டுப் பழங் கதைகள் பலவற்றை இழந்திருப்போம்.

1936ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் முதல் மாணவராகத் தேர்வு பெற்று 1952 வரை தாம் பெற்ற தமிழ்ப் புலமையினைத் தமிழ் மக்களுக்கு வழங்குதற்கு வாய்ப்பின்றி வறிதே நாள் கழித்துக் கொண்டிருந்த பெருமழைப் புலவர் சோமசுந்தரனாரைச் சூளாமணி உரை எழுதும் வகையில் ஆட்சியாளர்க்கு அறிமுகப் படுத்திய பெருமை திரு இராமசாமிப் புலவர்க்கே உண்டு. அது முதல் பெருமழைப் புலவர் பழந்தமிழ் இலக்கியங்களுள் பல நூல்களுக்கு உரை எழுதி, கழகத்துக்குப் புகழ் ஈட்டித் தந்தனர். கழக நூல்களுள் பெரும்பான்மையான நூல்களை எழுதியவர் திரு இராமசாமிப் புலவரேயாவர்.

*"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்*
*எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி*
*அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்*
*கருமமே கண்ணாயி னார்"*

என்ற நீதிநெறி விளக்கச் செய்யுளுக்குத் திரு இராமசாமிப் புலவர் எடுத்துக்காட்டாகவும்,

*"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்"*

என்ற திருக்குறள் வெண்பாவுக்கு ஆட்சியாளர் எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றனர் என்பது அறிந்து இன்புறுதற் குரியது.

(தொடரும்)

—வ. சு.

# இறைமையில் இசைந்த வாழ்வு

[திரு. மா. சண்முகசுப்பிரமணியம்]

(முன் இதழ் ரு௯ ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இறையுணர்வும் இன்பவாழ்வும்

"இதயத்தில் இறையுணர்வினை இசைத்து நிற்பவன், சிந்தனையைச் சிதறவிடாமல், ஐம்புலன்களையும் அடக்கி, தன்னை ஆளும் தகைமை பெறுகின்றான்."

—தைத்திரீய உபநிடதம்.

**இன்பத்தை நாடும் நம் வாழ்வு:**

இன்பத்தை நாடியே நாம் அனைவரும் வாழுகின்றோம். மக்கள் மட்டுமன்றி உயிரினங்கள் அனைத்துமே இன்பத்தை நாடித்தான் இயங்குகின்றன. இன்பவேட்கை நம் மனத்தில் இயல்பாகவே உள்ளது. ஒவ்வொருவரும் வெவ்வேறு வழிகளில் இன்பத்தினைப் பெற முயன்றாலும், இன்பவேட்கை என்ற இயல்பு எல்லாருக்கும் பொதுவாக இருக்கின்றது. உலக வாழ்விற்கு உந்துதலாக இருப்பதே இந்த இன்பவேட்கை தான்.

இன்பத்தை இரு வகைகளாகப் பிரிப்பதுண்டு. ஐம்பொறிகளால் நாம் அனுபவிக்கும் இன்பம் ஒரு வகை; ஐம்பொறிகளின் உதவியின்றி நாம் பெறும் இன்பம் மற்றொரு வகை.

பருப்பொருள்களால் நாம் அடையும் இன்பத்தை நுகர்வதற்கு ஐம்பொறிகளே கருவிகளாக உள்ளன. உறுசுவையும் நறுமணமும், இன்னிசையும் எழிற்காட்சிகளும் உடல் மருவு உணர்வுகளும் ஐம்புலன்கள்வழி நாம் அடையும் இன்பங்கள் ஆகின்றன.

சீரிய நூலொன்றைப் படிப்பதால் நம் சிந்தனைக்கு இன்பம் சேருகிறது. கவிதையின் நயத்தினில் நம் உள்ளம் திளைக்கின்றது. பிறர்மீது அன்பு காட்டி நாம் இன்பமடைகின்றோம். இத்தகு இன்பங்கள் புலன்கள்வழி வருவதில்லை. இவற்றை நுண்பொருள் இன்பங்கள் என்கிறோம்.

இவ்வாறு, பருப்பொருள்களிலிருந்தும் நுண்பொருள்களிலிருந்தும் நாம் இன்பத்தினை நுகர்கின்றோம்.

**உலகம் மாயை என்ற கொள்கை :**

உலகில் நாம் காணும் பருப்பொருள்கள் எல்லாம் மறைந்துவிடுகின்றன. அவற்றிலிருந்து நாம் பெறும் இன்பமும் நிலைத்து நிற்பதில்லை. எனவே, பருப்பொருள்களும் அவற்றிலிருந்து நாம் பெறும் இன்பமும் பொய்ம்மையான மாயை என்ற ஒரு கொள்கை உண்டு. உலகம் ஒரு மாயை ; உலகமும் உலகப் பொருள்களும் அளிக்கும் இன்பதுன்பங்களும் கனவு போன்றவை என்று கூறுவது அக்கொள்கை.

இது நம் வாழ்விற்கு ஒவ்வாத கொள்கையாகும். மாறுவதெல்லாம் மாயை என்றால், மறைவதெல்லாம் மாயை என்றால், மாயையாக இல்லாதது என்று எதைக் கூறுவது ? இவ்வுலகப் பொருள்கள் மறைந்து போவன என்றால், எண்ணிலா அண்டங்கள் அத்தனையும் என்றோ ஒரு காலத்தில் மறைந்து போவனவாம். எனவே, எல்லாமே மாயை என்று கூறுவது தான் மயக்கத்தைத் தருவதாக உள்ளது.

ஓங்கி நிற்கும் மலைகளும் ஓடி வரும் நதிகளும், பரந்து விரிந்த கடலும் பார் மேலுள்ள உயிர்களத்தனையும் மாயை தாமா ? சூரியனும் சந்திரனும் சுற்றியுள்ள அண்டங்களும் மாயைத் தோற்றந்தாமா ? நம்மை ஈன்றெடுத்த தாயும் தகப்பனும் அவர்கள் நம்மீது காட்டும் பற்றும் பாசமும் பொய்யா ? மனைத்தக்க மாண்புடை மனைவி காட்டும் அன்பு வெறும் கனவாகிவிடுமா ? நம் மடியிலிருந்து மழலை பேசும் மதலைச் செல்வங்கள் கற்பனைத் தோற்றங்கள்தாமா ? கனவுக் காட்சிகள் தாமா ?

> "வானகமே, இளவெயிலே, மரச்செறிவே
> நீங்க ளெல்லாம்
> கானலின் நீரோ ? — வெறுங்
> காட்சிப் பிழைதானோ ?"
>
> —பாரதியார்

என்று பாடிய கவி பாரதியார் கேட்கின்றார் :

"இந்த உலகமே பொய்" என்று நமது தேசத்தில் ஒரு சாத்திரம் வழங்கி வருகிறது. சன்னியாசிகள் இதை ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கட்டும்......... குடும்பத்திலிருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா ? நடுவீட்டில் உச்சரிக்கலாமா ? அவச்சொல்லன்றோ ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப்போன வீடும் வயலும் பொய்யா ? தங்கச்சிலை போல நிற்கிறாள் மனைவி ; நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர்

விட்டுக் கரைந்தாள்; நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள்; நம்மனப்புக் குழந்தைகளை வளர்த்தாள்; அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தாமா? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா?''—இவ்வாறு உணர்ச்சியுடன் வினாக்களை எழுப்பும் கவிஞர்,

*"காண்பதுவே உறுதிகண்டோம்*
*காண்பதல்லால் உறுதியில்லை;*
*காண்பதும் சத்தியமாம் — இந்தக்*
*காட்சி நித்தியமாய்"*

என்று உறுதிபடக் கூறுகின்றார்.

உலகமும் உலக வாழ்வும் மாயை என்ற கூற்றினை ஒட்டிய மற்றொரு கொள்கையும் உண்டு. மாயையான உலகத்து இன்பங்களை நுகர்வதற்குக் கருவிகளாக அமைந்துள்ள ஐம்புலன்களையும் முழுதுமாக அடக்கி அவித்துவிட வேண்டும்; புலனின்பங்களை நுகர்வதே கூடாது என்பது அக்கொள்கை. இஃது அறிவிலார் கொள்கை என்றும், ஐம்புலன்களையும் முழுதுமாக அவித்துவிட்டால் நாம் உயிரற்ற அசேதனப் பொருள்களாகி விடுவோம் என்றும் விளக்குகின்றனர் சான்றோர்கள்:

*"அஞ்சும் அடக்கு அடக்குஎன்பர் அறிவிலார்*
*அஞ்சும் அடக்கும் அமரரும் ஆங்கில்லை*
*அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு*
*அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே—"*

*[திருமந்திரம்—2033]*

**வாழ்க்கை வாழ்வதற்கே:**

எனவே, உலகத்து இன்பங்களைப் புறக்கணித்து நாம் வாழ வேண்டியதில்லை. அவ்வாறு வாழ முயலுவதும் இயற்கை நெறிக்கு மாறுபட்டது.

உலகிலே நாம் உதித்தது கண்மூடித் துறவியாகக் காட்டிலே திரிவதற்கன்று. உலகத்து இன்பங்களை உற்றபடி நுகர்வதால்தான் நம் வாழ்வே முழுமையடைகின்றது. உலகத்தில் இதுவரை தோன்றிய மக்களனைவரும் உலகத்து இன்பங்களை ஒதுக்கித் தள்ளி இருந்தால், மனித நாகரிகம் என்ற வளர்ச்சியை நாம் இப்பொழுது காண முடியாது போயிருக்கும். இலக்கியத்தையும் இன்கலைகளையும் ஏன், மெய்ஞ்ஞானத்தையும்கூட மனிதன் பெற்றிருத்தல் இயலாது.

மனிதனது இன்பவேட்கையின் மலர்ச்சியே ஓவியமாகவும் காவியமாகவும் உருவெடுக்கின்றன. அந்த இன்பவுணர்வின் குரலை இசையிலே நாம் கேட்கின்றோம், அதன் இயக்கத்தை நாட்டியத்திலே காண்கின்றோம்.

ஆதலால், "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற உறுதியுடன், உலகத்து நலன்களை உற்றபடி நுகர்ந்து இன்பமாக வாழ்வதே ஏற்ற வாழ்வாகும்.

ஆனால், நம்மில் பலரும் இம் முயற்சியிலே வெற்றி பெறுவதில்லை.

காரணம் என்ன?

**அளவான இன்பமும் வளமான வாழ்க்கையும்:**

அளவோடு இன்பங்களை நுகர்ந்தால்தான் நாம் வளமோடு வாழமுடியும். அளவு மீறாமல் இன்பங்களை நுகர்வதே வாழ்க்கைக் கலையாகின்றது. ஆனால், இந்தக் கலை பலருக்கும் கைவந்த கலையாக இல்லை.

அளவோடு வாழுங் கலையென்றால் என்ன? புலன்கள் வழியாக நாம் அடையும் இன்பத்தினை அளவோடு நுகர்தல் வேண்டும். அஃது அளவு மீறிய இடத்து இன்பம் துன்பமாக மாறிவிடுகின்றது!

உப்பில்லாத உணவு சப்பென்று இருக்கிறது. ஆனால், உப்பு அதிகமாகிவிட்டாலோ? அது 'சப்'பென்ற உணவை விடப் பயனற்றதாகி விடுகிறது. வாய்க்குச் சுவையான உணவைக்கூட நாம் வரம்புமீறி உண்டுவிட்டால் வயிற்றுக்குக் கேடு விளைகிறது. உடலுறு இன்பத்திலே ஓயாது திளைப்பவர்கள் உடலின் திறனையே இழந்துவிடுகின்றனர்! இவ்வாறு அளவுமீறிய இன்ப நுகர்ச்சி நம் துன்பத்திற்கே அடிகோலுகின்றது.

ஐம்புலன்களுக்கும் ஒருசேர இன்பந்தருவது ஆணும் பெண்ணும் கலந்து அடையும் இன்பம்:

> "கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள.'
>
> —குறள் *1101*

**இத்தகைய பாலின்பமும் அளவுக்கு மீறிவிடும்பொழுது அதனால் எத்தனையெத்தனை துன்பங்கள் விளைகின்றன!**

**இன்பவேட்கை வெறியாகிவிடுகின்றது :**

ஐம்புலனின்பங்கள் அளவோடு அமைதல் வேண்டும் என்ற உண்மையை நாம் உணர்ந்தாலுங்கூட, உணர்ந்த வழியில் நம்மால் நிற்க முடிவதில்லை. இன்பங்களை நுகரும் புலன்கள் மீண்டும் மீண்டும் அவ்வின்பங்களையே நாடுகின்றன. அந்த வேட்கையின் வேகம் பெருகிக்கொண்டே போகின்றது. இன்பநாட்டம் என்ற வேட்கை வெள்ளத்தின் வேகத்திலே நம் அறிவும் இழுத்துச் செல்லப்படுகின்றது! நாளடைவில் நம் புலன்களுக்கு நாம் அடிமையாகிவிடுகின்றோம்!

அறிவு தளர்ந்து நிற்க, புலன்கள் தம் நாட்டத்தின்படி இன்பத் தேட்டத்திலே ஈடுபடும்பொழுது எத்தனையெத் தனையோ இன்னல்கள் எழுகின்றன; வாழ்வில் ஒழுக்கம் குன்று கிறது; உயர்நெறி தவறுகின்றது. இன்பத்தை நாடுவதே ஏற்ற தொழிலென ஐம்புலன்களும் அயராது இயங்கும் பொழுது இன்பவேட்கை ஒரு வெறியாக மாறிவிடுகின்றது. இந்த வெறியின் வேகத்தினால், நன்மையென்றும் தீமை யென்றும் பாராமல், புகழ் என்றும் பழி என்றும் எண்ணாமல் எத்தனையோ இழிசெயல்களில் நாம் இறங்கிவிடுகின்றோம்! அதன் பயனாய், எவ்வளவோ இன்னல்களுக்கு ஆளாகின்றோம்!

ஐம்புலன்களுக்கும் அடிமையாகும் நம் வாழ்வு அவலநிலை எய்துகின்றது. கட்டுப்படாத புலன்களின் செயல்களால் கடமையும் கண்ணியமும் மறக்கப்படுகின்றன. முயற்சிகள் தளர் கின்றன; அறிவு மழுங்குகிறது; ஆற்றல் குறைகின்றது; நம் வாழ்வே வறண்டுவிடுகின்றது! இவ்வாறு, கட்டுப்படாத இன்பவேட்கையின் பயனாக நமக்குத் துன்பமே விளைகின்றது!

இந்நிலையைத் தவிர்ப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

புலன்களைக் கட்டுப்படுத்தி நிறுத்தும் திடமான அறிவு நமக்கு இருத்தல்வேண்டும். புலன்கள் இழுக்கும் வழியில் அவற்றைச் செல்லவிடாமல் தடுத்து, தீயவழியில் இருந்து விலக்கி, நல்வழிச் செலுத்துவதுதான் அறிவின் தொழிலாகும், அதன் திறனுமாகும்.

> *"சென்ற விடத்தால் செலவிடா தீதொரீஇ*
> *நன்றின்பால் உய்ப்ப தறிவு."*

—குறள்-422

**புலனடக்கமும் இன்பவாழ்வும்:**

குதிரைமீது ஏறி அதைச் செலுத்துவோர், அக் குதிரையைக் கட்டுப்படுத்திச் செலுத்துகின்றனர். குதிரை அதன் போக்கில் பள்ளத்தில் விழுந்தோ வெள்ளத்தில் இறங்கியோ விடில் அதன்மீது ஏறிச் செலுத்திக் கொண்டிருப்பவருக்கும் ஆபத்து விளைகின்றது. குதிரையைச் செலுத்துபவராவது குதிரையைவிட்டுக் குதித்துத் தப்பிவிடலாம். ஆனால், புலன்கள் என்ற குதிரைகளைச் செலுத்தும் நாம் அப் புலன்களோடு ஒன்றியுள்ளோம். கட்டுக்கடங்காமல் புலன்களைப் போகவிட்டு நாம் மட்டும் தப்பிவிடுவது இயலாது. புலன்கள் என்ற குதிரைகள் பள்ளத்தில் வீழ்ந்தாலும் வெள்ளத்தில் ஆழ்ந்தாலும் நாமும் சேர்ந்தே வீழ்கின்றோம், ஆழ்கின்றோம். எனவே, நம் ஐம்புலன்களையும் ஒழுக்கம் என்ற நேரிய பாதையிலிருந்து விலகிவிடாமல், பள்ளங்களில் விழுந்துவிடாமல், வெள்ளங்களில் ஆழ்ந்துவிடாமல் கட்டுப்படுத்திச் செலுத்தும் கடமை நமக்குள்ளது.

பருப்பொருள் இன்பங்களை நம் புலன்கள்வழி நாம் நுகர்ந்தாலும், அப்புலன்களைக் கட்டுப்படுத்தி நுகர்வதில்தான் உண்மையான இன்பம் உள்ளது. கட்டுப்பாடில்லாத புலன்கள் கரைகளை உடைத்துச் செல்லும் ஆற்றுநீரைப் போல் அழிவையே தருகின்றன.

விலங்கினங்களின் இன்ப நாட்டம் இயல்பாகவே அளவு மீறுவதில்லை. வேண்டிய உணவுக்குமேல் உண்ணுவதில்லை உயிரினங்கள். இனப்பெருக்கத்திற்கென மட்டுமே இணைப் பின்பத்தை நாடும் இயல்பினைக் கொண்டவை விலங்குகள். ஆனால், ஆறறிவு படைத்த நாம்தாம் அளவு மீறுகிறோம்.

சுவைமிக்க பண்டங்களைக் கண்டதும் பசியோடிருப்பவனின் நாக்கிலே நீர் ஊறுவதுபோல், இன்பப் பொருள்களை எண்ணியெண்ணி வேட்கைநீரைப் பெருக்குகின்றது, நம் மனம். அந்த வேட்கைநீர்ப் பெருக்கின் வேகத்திலே நம் மனம் அடித்துச் செல்லப்படுகிறது. அறிவின் ஆற்றல் தளர்கின்றது. இதனால் ஐம்புலன்களை அடக்கி ஆளும் திறன் குறைகின்றது.

அடக்கியாளப்படாத ஐம்புலன்களும், தறியிலே பிணைக்கப் படாத மதம்பிடித்த யானைகள் ஆகிவிடுகின்றன. கட்டுப் பாடின்றி, காடென்றும் மேடென்றும் அவை திரிந்து முடிவில் அவை இளைத்து நலிந்துவிடுகின்றன. அவற்றின் மீதுள்ள யானைப்பாகனும் இளைத்து நைந்து போகின்றான். இவ்வாறு

நைந்து நலிந்துபோனபின் அவை திருந்தித்தான் பயனென்ன?

"ஆக மதத்தன ஐந்து களிறுள
ஆக மதத்தறி யோடணை கின்றில
பாகனும் எய்த்துஅவை தாமும் இளைத்தபின்
யோகு திருந்துதல் ஒன்றறி யோமே."

—திருமூலர்-2023

**புலனடங்காத புல்லிய வாழ்வு:**

அடங்காத ஐம்புலன்களின் ஆட்டத்தின் பயனாக அவல முற்றோர் பலரையும் நாம் காணுகின்றோம். குழி விழுந்த கண்களும் கூன் விழுந்த முதுகுமாய்க் காளைப் பருவத்திலேயே காட்சியளிக்கின்றனரே எத்தனையோ பேர்கள், அவர்களுள் பெரும்பாலார் ஐம்புலன்களின் அடங்காத ஆட்டத்தினால் அயர்வுற்றோர்தாம். வளம் குன்றி, உடல் மெலிந்து, உளம் நலிந்து உழல்பவர்களுள் பலர் மாளா இன்ப வேட்கையால் மீளாத் துன்பத்தில் ஆழ்ந்தவர்கள்தாம். பெண்மையைப் போற்றும் திண்மையின்றி, பிறர்மனை நயக்கும் பேதைமை உடலின்ப வேட்கை வெறியால் விளைவதுதானே? மதுவுண்ணும் இன்பத்தால் மதியிழந்து தவிப்பவர்கள் எத்தனை பேர்! அவர்கள் சோகக் கதைகளைத்தான் சொல்லவுந் தகுமோ!

ஓங்கிய மலைகளிலுள்ள ஒடுங்கிய பாதைகளில் உந்து வண்டிகளை ஓட்டும்பொழுது நாம் மிகுந்த விழிப்போடு இருத்தல் வேண்டும். கவனம் சிறிது தவறினாலும் உந்துவண்டி உருண்டு விழுந்து விடுகிறது. உயிருக்கு ஊறு விளைகின்றது. இது போன்றே, வாழ்க்கையில் உயர்நிலையில் உள்ளோர்கள் புலனடக்கத்தில் மிகுந்த விழிப்புடன் இருத்தல் இன்றியமையாததாகின்றது. இதில் தவறிவிட்டால் உயரத்துக்கு ஒத்த வீழ்ச்சி ஏற்பட்டுவிடுகின்றது! நாவன்மையால் நல்ல புகழ் பெற்றோரும், உயர்ந்த பதவியால் ஓங்குபுகழ் அடைந்தாரும், கலைபயில் திறனால் கண்டோர் வியக்க நின்றோரும் புலனடக்கம் இல்லாததால் பொற்பிழந்து வீழ்கின்றனர்!

"புலன்கள் ஐந்தால் ஆட்டுண்டு போதுபோக்கி
புறம்புறமே திரியாதே போது நெஞ்சே" —திருநாவுக்கரசர்

என்று நெஞ்சுக்கு நெறி புகட்டுகின்றனர் நேர்மையாளர்கள்.

**இறையுணர்வும் புலனடக்கமும்:**

நுண்ணிய அறிவும் திண்ணிய நெஞ்சமும் உடையவர்கள் கூட, புலன்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியிலே வெற்றி பெறுவ

தில்லை. காரணம், புலன்களைக் கட்டுப்படுத்தும் திறன் வெறும் நுண்ணறிவால் மட்டுமே வந்துவிடுவதன்று. யானைகள் போன்று புலன்கள் திரிகின்றன என்று கண்டோம். அந்த யானைகளைத் தடி கொண்டு அடக்கவோ, சங்கிலி கொண்டு பிணிக்கவோ முடியாது. ஆனால், அவை யானைப் பாகனின் சிறுகோலுக்கு அடங்குகின்றன. அந்தச் சிறுகோலாக விளங்குவது இறையுணர்வு. இறையுணர்வினால்தான் அடங்காத ஐம்புலன்களை அடக்க முடியும் என்பது சான்றோர்கள் அனுபவத்தால் கண்ட உண்மை. எனவே, ஐம்பொறிகளை அடக்கியாளும் பொறியாக இறைமையை ஏத்துகின்றனர் மெய்யுணர்ந்தோர் :

"நாளும் பொறிவழியை நாடாத வண்ணம் எமை
ஆளும் பொறியால் அருள் வருவதெந் நாளோ ?"
—தாயுமானவர்

ஐம்பொறிகளையும் ஆளும் பொறியாக நின்று இறையுணர்வு எவ்வாறு உதவுகின்றது ?

இந்த உண்மையினை நாம் உணர்ந்துகொண்டால் ஐம்புலன்களை அடக்கும் திறனை நாம் மிக எளிதிலே பெற்றுவிடுகின்றோம்.

அலைகடலைக் கண்டவர்களுக்கு அடுத்துள்ள ஏரி சிறியதாகவே தோன்றுகிறது. தேனைச் சுவைத்த நாக்கிற்குத் தெங்கிளநீரின் இனிப்புச் சுவைப்பதில்லை. ஆதவனின் ஒளி முன்னால் அகல்விளக்கின் ஒளி அற்பமாகிறது. இதுபோல், இறையுணர்வு என்ற இன்ப அனுபவம் பெற்றவர்களுக்குப் புலனுணர்வு இன்பங்கள் மிகவும் புன்மையாகி விடுகின்றன. இதயத்திலே இசையும் இறையுணர்வு என்ற இன்ப ஒளிக்கு முன்னால் இதர இன்பங்கள் இழிந்து விடுகின்றன.

ஐம்பொறிகளும் அழியும் உடலில் அமைந்திருப்பவை. அவற்றுக்கு இன்பமளிக்கும் பருப்பொருள்களும் அழிந்து விடுபவை அழியும் பருப்பொருள்களிலிருந்து அழியும் ஐம்பொறிகள் அடையும் இன்பம் அளவுடையது, அறுதியுறுவது. ஆனால், அழிவில்லாத நம் உயிர் அழிவற்ற இறைமையுடன் இசைவதால் இதயத்தில் எழும் இறைமை இன்பமோ அளவில்லாதது, அறுதியில்லாதது. இதனால்தான், புலனின்பங்களைச் சிற்றின்பங்கள் என்றும் இறையுணர்வின்பத்தைப் பேரின்பம் என்றும் பிரித்துக் கூறியுள்ளனர். இதைப் பற்றி விரிவாக முன்னர்க் கண்டோம்.

இங்கு நாம் காண்பது, இறையுணர்வு என்ற பேரின்ப அனுபவம் சிற்றின்பங்களை நாடும் புலன்களைக் கட்டுவதற்கு எவ்வாறு துணைபுரிகின்றது என்பதைத்தான்.

**இறையுணர் வின்பத்தின் ஏற்றம்:**

இறைமையின் தன்மையை நினைந்து அதனை எடுத்துரைக்க இயலாது என்ற உண்மையினை உணர்ந்து உருகி நிற்கும் அன்பர் உள்ளத்தில் உதிக்கும் ஒளியாக, கரையில்லாத இன்பக் கடலாக இலங்குகின்றது இறையுணர்வு:

*"உரையிறந்த அன்பர் உளத்து ஓங்கொளியாய் ஓங்கி*
*கரையிறந்த இன்பக் கடலே பராபரமே"* — *தாயுமானவர்*

"உள்குவார் மனத்தின் உறுசுவை அளிக்கும் ஆரமுதான" இறைமையை "ஆற்றின்ப வெள்ளமாய்", "ஆனந்த மாகடலாய்", "ஆராத இன்பம் அருளும் மலையாய்" போற்றுகின்றனர் மெய்யடியார்கள்.

சுவையென்றும், மணமென்றும், அழகென்றும், இசையென்றும் புலன்வழி பெறும் இன்பங்களைக் குறிக்கின்றோம். புலன்களின் உதவியின்றி நம் உள்ளம் உணரும் இறைமையின்பத்திற்கு இவ்வகைக் குணங்கள் ஏதும் இருப்பதற்கில்லை. எனவே,

"குணங்கள் தாம் இல்லா இன்பமே" —*திருவாசகம்*

என்று இறையுணர்வின்பத்தை ஏத்துகின்றனர் அடியார்கள். இருப்பினும், நமக்கெல்லாம் அந்த ஒப்பற்ற இன்பத்தின் உயர்வினை உணர்த்தும்பொருட்டுப் புலன்கள்வழி வரும் இன்பப் பண்புகளை யெல்லாம் இறையுணர்வின்பத்தின்மீதும் ஏற்றிச் சொல்லுகின்றனர்:

*"தேனாய்த் தீம்பழமாய் சுவைசேர் கரும்பாய் அமுதந்*
*தானாய் அன்பருளே இனிக்கின்ற தனிப்பொருளே"*
—*இராமலிங்க அடிகள்*

இறையுணர்வின்பத்தின் இனிப்பினை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டுமே என்ற ஆர்வத்தால், அந்த இனிப்பு எப்படிப்பட்டது என்பதையும் எடுத்துக் கூறுகின்றனர் அடியார்கள்:

*"தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச்*
*சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே*

தனித்தநறுந் தேன்பெய்து பசுர்பாலும் தெங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி
இனித்தநறு நெய்யளைந்தே இளஞ்சூட்டி னிறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடுந்தெள் அமுதே"

—இராமலிங்க அடிகள்

சுவையான உணவினை விரும்பும் நம் நாவிலே சுவைநீர் ஊறும்படி இறையுணர்வின் ஈடில்லா இனிமை எடுத்துக்காட்டப் படுகிறது!

நாவின் சுவையில் நாட்டமில்லாதவர் இருக்கலாம். ஆயினும், உண்டாரை மயக்கும் கள்ளினைப் போலன்றிக் கண்டாரையும் மயங்கவைக்கும் காமத்திற்கு அடிமையாகாதவர் எவருள்ளார்? காம இன்பமே கழிபேரின்பம் என்று கருதியிருப் போர்க்கும் கருத்திலே படும்படி இறையுணர்வின்பத்தின் ஏற்றத் தினைக் கூறியுள்ளனர் ஞானிகள்:

"இளவேனின் மாலையாய்க் குளிர் சோலையாய் மலர்
இலஞ்சி பூம் பொய்கை அருகாய்
ஏற்பசந் திரகாந்த மேடையாய் அதன்மேல்
இலங்கும் அரமிய அணையுமாய்த்
தளவேயு மல்லிகைப் பந்தராய்ப் பால்போல்
தழைந்திடு நிலாக்கா லமாய்த்
தனியிளந் தென்றலாய் நிறைநரம் புளவீணை
தன்னிசை ப்பாட லிடமாய்க்
களவே கலந்தகற் புடைய மட வரல்புடை
கலந்தநய வார்த்தை யுடனாய்க்
களிகொள இருந்தவர்கள் கண்டசுகம் நின்னடிக்
கழல்நிழற் சுகநிகருமோ?........."

—இராமலிங்க அடிகள்

இளவேனிற்காலம், மாலை நேரம், குளிர்ந்த சோலை. அச் சோலையிலே ஒரு பூந்தடாகம். தடாகத்தினருகே சந்திரகாந்த மேடை. அம்மேடையில் உள்ள நிலா முற்றத்தில் மல்லிகைப் பூப்பந்தலுக்கு அடியிலே அமர்ந்துள்ளோம்! வெண்ணிலவின் தண்ணொளி வீசிக்கொண்டிருக்கின்றது. தவழ்ந்து வரும் தென்றலிலே வீணை இசையும் கலந்து வருகின்றது. இத்தகு சூழலிலே, கனிமதுரமொழி பேசும் கற்புடைய நங்கையுடன் கூடிக் கலந்திடும் இன்பம் எத்தகையதாக இருக்கும்!

உடலின்பந்துறந்த உத்தம ஞானிகள் அவ்வின்பத்தின் எல்லையைக் கோடிட்டுக் கூறி, எல்லையெய்தும் அந்த இன்பமும்

இறையுணர்வின்பத்திற்கு ஈடாவதில்லை என்று எடுத்துக்காட்டுகின்றனர்!

இவ்வாறு இறையுணர்வின்பத்தின் ஏற்றத்தினைக் கூறுவது பொய்யுரையோ புனைந்துரையோ அன்று. இதன் உண்மையை இன்றே இப்பொழுதே நாம் காணலாம். எல்லாமாய் எங்குமாய் என்றுமாய் நிற்கும் இறைமை நம் உள்ளத்திலும் உறைந்துள்ளது; நாமும் அந்த இறைமையோடு இணைந்துள்ளோம் என்ற எண்ணத்தை இதயத்திலே இசைத்துவிட்டால் அதே இன்பவுணர்வினை நாம் பெறுகின்றோம்.

எல்லையில்லாப் பரவெளியில் எண்ணில்லா அண்டங்களை இடைவிடாது இயக்கும் ஈடில்லா ஆற்றலை எண்ணிப் பார்த்து, அந்த ஆற்றலோடு நாமும் இணைந்துள்ளோம் என்ற உண்மையினை ஓர்ந்து உணர்ந்து நிற்கும் நிலையில் நம் உள்ளத்தில் உதிக்கின்றதே உவப்பு, அந்த ஒப்பில்லாத உவப்பினை என்னென்பது! அந்த ஈடில்லா இன்பவுணர்வு தீஞ்சுவையைவிட, நறுமணத்தைவிட, இன்னிசையைவிட, எழிற்காட்சியைவிட, உடல் மருவு சுகத்தைவிட எத்தனையோ மடங்கு மேலானதாக உள்ளது. இறைமையின் தன்மையை எண்ணி அதை நம் இதயத்தில் இசைக்கும் பொழுதெல்லாம் இந்த இன்பவுணர்வினை நாம் எய்துகின்றோம்!

இவ்வாறு, இறையுணர்வு நம் இதயத்தில் இசைந்ததும் எல்லையில்லாத இன்ப மாகடலிலே நாம் மூழ்கித் திளைக்கின்றோம்! இவ்வாறு திளைத்தவர்கள் தாம்,

*"மாளா இன்ப மாகடலே"*

என்றும்,

*"உள்குவார் மனத்தின் உறுசுவை அளிக்கும் ஆரமுதே"*

என்றும் இறையுணர்வின் தன்மையை எடுத்தோதியுள்ளனர்!

**இறையுணர்வின்பமும் புலனுணர்வின்பமும் :**

இறையுணர்வின்பம் நம் இதயத்திலே இசைந்து இசைந்து அதனால் இறையுணர்வின்ப அனுபவம் நமக்கு ஏற்படுகின்றது! அந்த இணையற்ற அனுபவத்தின் பயனாக, புலன்களின்பம் மிகச் சாதாரணமாக நமக்குத் தோன்றுகின்றது. மாளா இன்ப மாகடலான இறையுணர்வின்பம் எங்கே, அளவுடைய, அறுதியுடைய புலனின்பங்கள் எங்கே! வற்றாத கடலெங்கே வற்றி நிற்கும் குளமெங்கே! இறையின்பத்திற்கு முன்னால் புலனின்பம் கதிரவன் முன்னுள்ள கைவிளக்காகி விடுகின்றது.

இறையுணர்வின்பத்தில் திளைக்கும் நம் இதயம் புலனின்பங்களின் புன்மையை உணருகின்றது. எனவே, புலன்களின் இன்ப வேட்கை குறைகின்றது. இதனால் புலன்களைக் கட்டுப்படுத்துவது எளிதாகின்றது. ஐம்புலன்களுக்கும் நாம் அடிமையாகாமல், அப் புலன்கள் நமக்கு அடங்குகின்றன. இவ்வாறு புலனடக்கம் என்ற பேராற்றலை நாம் பெறுகின்றோம்.

நன்னெறியில் நிற்கவிடாது, நம் மனத்தினைக் கலைக்கும் ஐம்புலன்கள் என்ற கள்வர்களை இறையுணர்வால்தான் வெல்ல முடியும் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது, இப்பாடல்:

"புள்ளுவர் ஐவர் கள்வர் புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர் தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடை யவர்கள் தம்மை முக்கணன் பாதநீழல்
உள்ளுடை மறைந்து நின்றங்கு உணர்வினால் எய்யலாமே."

—திருநாவுக்கரசர்

இறையுணர்வின் இத்திறனை வியந்து வியந்து பாடுகின்றனர் அடியார்கள். இன்னமுதாக நம் இதயத்தில் ஊறிப் பரஞ்சோதியாக ஒளிரும் இறையுணர்வால் வஞ்சப்புலன்கள் செல்லும் வழிகள் அடைக்கப்படுகின்றனவாம்:

"மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்து அமுதே
ஊறிநின்று என்னுள் எழு பரஞ்சோதி........."

—திருவாசகம்

எளிதிலே கட்டுப்படாத புலன்களைக் கயவர்கள் என்று கடிந்து கூறி, அவ்வைந்து கயவர்களையும் இறைமையின் திருவருளால்தான் வெல்லவேண்டும் என்று கூறுகின்றனர்.

"ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கிலாத ஓரைவர் வன்கயவரை
என்று யான் வெல்கிற்பன் உன் திருவருள் இல்லையேல்?......"

—திருவாய்மொழி

ஐம்புலன்களையும் கட்டுவதற்கு இறைமையின் திருவருள் எவ்வாறு உதவுகின்றது என்பதையும் விளக்கியுள்ளனர்.

"ஆக மதத்தன ஐந்து களிறுள
ஆக மதத்தறி யோடுஅணை கின்றில"

மதங்கொண்ட யானைகளாகத் திரியும் ஐம்புலன்களும் அவற்றைக் கட்டுவதற்கென்றுள்ள தறியின் அருகில்கூட வருவதில்லையாம். அந்தத் தறி எது?

அது ஞானம் என்ற தறி. இறையுணர்வால் நாம் எய்தும் ஆனந்தத்திலே விளைவது அந்த ஞானத்தறி. இத்தகைய ஆனந்த ஞானத்தறியிலே ஐம்புலன்களைப் பூட்டியதும் அவை கட்டுக் கடங்கி நிற்கின்றன. இதனைத் தெளிவாகக் கூறுகிறது இப் பாடல்:

"பாய்ந்தன பூதங்கள் ஐந்தும் படரொளி
சார்ந்திடு ஞானத் தறியினிற் பூட்டிட்டு
வாய்ந்துகொள் ஆனந்த மென்னும் அருள்செய்யில்
வேய்ந்துகொள் மேலை விதியது தானே."

—திருமூலர்-2038

இறையுணர்வால் நாம் எய்தும் ஈடில்லாத இன்பமே, இன்பங்களை நாடிச் செல்லும் ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தும் உபாயம் என்பதை உண்மையனுபவம் பெற்று உயர்ந்தோர்கள் உறுதியாகக் கூறுகின்றனர். இதைவிடத் தெளிவாக அவர்கள் வேறு எவ்வாறு நமக்குப் புகட்டமுடியும்?

இந்தப் பேருண்மையை நாமும் நம் அனுபவத்தால் உணருகின்றோம். இறையுணர்வினை நம் இதயத்திலே இசைத்து நிற்கும்பொழுது ஈடில்லாத இன்பத்தினை நாம் பெறுகின்றோம். இந்த இறைமை இன்பத்திலே திளைத்து நிற்கும் நம் உள்ளத் திற்கு, நாளடைவில், புலன்கள்வழி வரும் இன்பங்கள் புன்மை யாகத் தோன்றுகின்றன. இறையுணர்வு என்ற ஒளியமுதம் நம் அகத்திலே ஒளிருவதால் புலனுணர்வின்பங்கள் அற்பமாகி விடுகின்றன. எனவே, ஐம்புலன்களும் எளிதில் கட்டுப்பட்டு நிற்கின்றன. இவ்வாறு புலனடக்கம் என்ற பேராற்றலை இறை யுணர்வின் வழியாக எளிதிலே நாம் எய்துகின்றோம்!

இதன் பயனாய் ஐம்புல இன்பங்களை அளவோடு அனு பவித்து வளமாக வாழுகின்றோம். கட்டுப்பாட்டுடன் நடந்து கண்ணியமாக விளங்குகின்றோம். ஒழுங்கு தவறாமல் ஒழுக் கத்தைக் கடைப்பிடிக்கின்றோம். ஒழுக்கத்தால் வரும் உயர் புகழையும் எய்துகின்றோம்.

**தன்னை வென்றாளுந்திறன்:**

ஐம்புலன்களும் நம்மைவிட்டுத் தனித்து இல்லை. நம் உயிரோடும் உணர்வோடும் ஒன்றியே அவை உள்ளன. ஆதலால், ஐம்புலன்களை வென்று கட்டுப்படுத்தும்பொழுது நம்மை நாமே வென்றவர்கள் ஆகின்றோம். நம்மை நாமே

வென்று ஆளுந்திறனை இறையுணர்வால்தான் நாம் எய்து வதால்,

> "தன்னை யாளுஞ் சமர்த்தெனக் கருள்வாய்
> ........................................
> தனைத்தான் ஆளுந் தன்மை நான் பெற்றிடில்
> எல்லாப் பயன்களும் தாமே எய்தும்"

என்று இறைமையிடம் இறைஞ்சுகின்றது, நம் உள்ளம்.

தன்னை வென்றாளும் தனித்திறன் பெறுவதுதான் அரிய செயல். இந்த வெற்றியை அடைந்த நாம் மற்ற வெற்றிகளை எளிதிலே ஈட்டுகிறோம். இதனால் எத்தனையோ பெருமைகளும் மேன்மைகளும் நம்மை வந்தடைகின்றன.

> "என்னவரங்கள், பெருமைகள், வெற்றிகள்
> எத்தனை மேன்மைகளோ!
> தன்னை வென்றாலவை யாவும் பெறுவது
> சத்தியமாகு மென்றே
> முன்னை முனிவர் உரைத்த மறைப்பொருள்
> முற்றுமுணர்ந்த பின்னும்
> தன்னை வென்றாளும் திறமை பெறாதிங்கு
> தாழ்வுற்று நிற்போமோ?"

—பாரதியார்-ஆத்ம ஜயம்

தன்னை வென்றாளும் திறமை பெறாது இனி நாம் தாழ்வுற்று நிற்கவேண்டா. இறையுணர்வு என்ற ஈடில்லா இன்ப அனுபவத்தால் புலன்களைக் கட்டுப்படுத்துவோம். அதனால், தன்னை வென்றாளும் தனித்திறன் பெறுவோம். வாழ்விலே வெற்றிகளை ஈட்டுவோம்! மேன்மையினை எய்துவோம்!

> "உரைமாண்ட உள்ளொளி உத்தமன் வந்துளம் புகலும்
> கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
> இரைமாண்ட இந்திரியப் பறவை யிரிந்தோடத்
> துரைமாண்ட வாபாடித் தோணோக்கம் ஆடாமோ."

—திருவாசகம்

# உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

## நுல்[2] (துளைத்தற் கருத்து வேர்)

நுல் — நொல் — நொலை = உட்டுளையுள்ள அப்ப வகை. நொலை — நொலையல் (பிங்.).

நொல்—நெல்—நெலி. நெலிதல் = கடைதல்.

நெலி—ஞெலி. ஞெலிதல் = 1. தீக்கடைதல். "ஞெலிதீ விளக்கத்து" (புறம். 247). 2. குடைதல். (அக. நி.). 3. உரசுதல். "ஞெலிகழை" (ஐங்குறு. 307).

ஞெலி = உரசித் தீப்பற்றும் மூங்கில். "ஞெலிசொரி யொண்பொறி" (அகம். 39).

நெல்—நெர் — நெரு — நெருப்பு = மூங்கில் ஒன்றோ டொன்று உரசிப் பற்றும் தீ.

நொல் — நோல்—நோலி — நோனி—வ. யோனி. இச் சொற்கு 'யு' (to unite) என்பதை வடவர் வேராகக் காட்டுவது பொருந்தாது.

நுல் — நல் — நல்லி = உட்டுளையுள்ள மூளை யெலும்பு. நல்லி—இ. நல்லீ.

நல்—நால்—நாலி—நாலிகை = உட்டுளை யுள்ள மூங்கில்.

நுல்—நுள்—நுளை—நுளையன் = 1. நீருட் புகுந்து அல்லது முழுகி மீன் பிடிப்பவன். 2. நெய்தல் நிலத்தான். (திவா.). ஒ. நோ: ம. முக்குவன் = மீன் பிடிப்பவன், நெய்தல் நிலத் தான். நுளை = நுளையர் குலம்.

நுள்—நள் = 1. உள். 2. நடு. க. நள்.

நள்ளிடை = நடுவிடம். நள்ளிரவு—நடு இரவு.

ஒ. நோ: அகடு = உள், நடு.

நள் — நண் — நடு = 1. உள்ளிடம். "நடுவூருள் நச்சு மரம்பழுத் தற்று" (குறள். 1008). 2. உள்ளுறைவோனை

இறைவன். "கெடுவில் கேள்வியுள் நடுவா குதலும்" (பரிபா. 2 : 25). 3. வானத்தின் உச்சி. "காலைக் கதிரோன் நடு வுற்றதோர் வெம்மை காட்டி" (கம்பரா. நகர் நீங்கு. 123). 4. அகடு (மையம்). 5. இடுப்பு. "நடுங்க நுடங்கும் நடுவு" (திருக்கோ. 31). 6. இடைப்பட்டது. 7 நடுநிலை. "நடு வாக நன்றிக்கட் டங்கியான்" (குறள். 117). 8. நயன்மை (நீதி). ம., க., து. நடு, தெ. நடுமு.

நடு — நடுவு — நடுவண் = அகடு, இடை.

நடு — நாடு = 1 முல்லைக்கும் நெய்தற்கும் இடைப்பட்ட மருத நிலம். "நாடிடை யிட்டும் காடிடை யிட்டும்" (சிலப். 8 : 61, அரும்.). 2. மக்கள் வாழும் இடம். 3. தேசம். எ-டு: ஆங்கில நாடு. 4. தேசப் பகுதி. எ-டு: பாண்டி நாடு. 5. ஊர். எ-டு: கூறை நாடு. 6. சிற்றூர் (நாட்டுப் புறம்). 7. அரசியம். 8. உலகம். "புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ" (குறள். 1323). 9. இடம். "ஈமநாட் டிடையி ராமல்" (கம்பரா. இலங்கை தே. 45). 10. ஒரு பேரெண். (பிங்.).

ம., தெ., க., து. நாடு.

ஒ. நோ :

"வட்ட வரிய செம்பொறிச் சேவல்
ஏனல் காப்போ ருணர்த்திய கூவும்
கானத் தோர்நின் றெவ்வர் நீயே
புறஞ்சிறை மாக்கட் கறங்கூறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைப வீழ்ந்தெனக் கூத்த
ராடுகளங் கடுக்கும் அகநாட் டையே" (புறம். 28)

அகம் = 1. உள். 2. உள்ளிடம். 3. மருத நிலம். "ஆலைக் கரும்பி னகநா டணைந்தான்" (சீவக. 1613).

நாடு — நாடன் — நாடான் — நாடார்.

நாடு — நாட்டான் — நாட்டார்.

நள் — நாள் — நாளம் = 1. உட்டுளை. (சூடா.). "கழுநீர் நாளத் தாளினு லொருத்தி யுண்டாள்" (இராமநா. உண்டாட். 19). 2. உட்டுளை யுள்ள தண்டு. "கமல நாளத்திடை" (கம்பரா. மிதிலைக். 75). 3. நரம்பு. நாளம்—வ. நால.

நாளம்—நாளி—நாழி=1. உட்டுளைப் பொருள். (பிங்.). 2. ஒரு படி, நாழி நவைதீ ருலகெலாம். (கம்பரா. சரபங்க. 29). ''நாழி முகவாது நானாழி'' (மூதுரை. 19). 3. நாழிகை வட்டில். 4. நாழிகை வட்டிலால் அறியப்படும் நேர அளவு (24 நிமையம்), (பிங்.). 5. நெசவுக் குழல். 6. அம்பறாத் தூணி. ''ஆர் ததும்பு மயிலம்பு நிறைநாழி'' (பரிபா. 18: 30). 7. நாழி வடிவான நாண்மீன் (பூரட்டாதி), (பிங்.).

ம., க. நாழி.

நாழி—வ. நாடி.

கைந்நாழி=சிறுநாழி.

நாழி—நாழிகை=1. நாழிகை வட்டில். 2. நாழிகை வட்டிலால் அறியப்படும் நேர அளவு (24 நிமையம்). ''உயிர்த் தில னொரு நாழிகை'' (கம்பரா. பிரமா. 200). 3. தெய்வப் படிமை யிருக்கும் சிற்றறை. 4. நாடா. ''செய்யு நுண்ணு குழிகையி னிரம்பா நின்று சுழல்வாரே'' (சீவக. 3019).

ம. நாழிக. க. நாளிகே (g).

நாழிகை—வ. நாடிகா.

உண்ணாழிகை (திருவுண்ணாழிகை)=கருவறை.

நாழி—நாடி=1. அரத்தக்குழாய். 2. ஊதை பித்த கோழை காட்டும் தாது நரம்பு. ''மூளை யெலும்புகள் நாடி நரம்புகள்'' (திருப்பு. 918). 3. இடை, பிங்கலை, சுழிமுனை யென்னும் மூச்சுக் குழாய்கள். 4. உட்டுளை யுள்ளது. (அரு. நி.). பூவின் தாள். (யாழ். அக.). 5. நாழிகை (24 நிமையம்). 6. யாழ் நரம்பு. நாடி—வ. நாடி.

நாடி—நாடா=1. நெசவுக் குழல். ''தார் கிடக்கும் நாடாப்போல மறுகுவர்'' (சீவக. 3019, உரை). 2. ஆடைக் கரையில் வைத்துத் தைக்கும் பட்டி (ribbon). நாடா—உ. நாரா.

நாளம்—நாணல்=1. உட்டுளையுள்ள தட்டை வகை. 2. கரும்பு வகை.

நுள்—நுழு—நுகு—நுங்கு. நுங்குதல்=1. விழுங்குதல் (துளை போன்ற வாய்க்குளிட்டு உட்கொள்ளல்). 2. உட் கொள்ளல். ''மகரவாய் நுங்கிய சிகழிகை'' (கலித்.). 3. வயி

ரூரப் பருகுதல். "நூறுநூறு குடங்களூ நுங்கினான்." (கம்பரா. கும்ப. 60).

க. நுங்கு.

நுங்கு—நொங்கு. நொங்குதல்=விழுங்குதல். "திங்க ளிருள் நொங்க" (தேவா. 1157 : 3).

ம. நொங்ஙு.

நுகு—நுகர். நுகர்தல்=1. உண்ணுதல். "அடிசில் பிறர் நுகர்க" (பு. வெ. 10, முல்லைப். 8). 2. இன்புறுதல். "நின்னணி நல நுகர்கென" (குறிஞ்சிப். 181). 3. வினைப் பயன் துய்த்தல்.

நுகர்ச்சி=1. உண்ணுகை. "கவியமுதம் நுகர்ச்சி யுறுமோ" (திவ். திருவாய். 8 : 10 : 5). 2. வினைப் பயன் துய்ப்பு. "அருந்தவ மாற்றியார் நுகர்ச்சி போல்" (கலித். 30). 3. துய்ப்புணர்ச்சி. "உருவு நுகர்ச்சி குறிப்பே பாவனை" (மணி. 30 : 189).

நுகு—நொகு—நொக்கு=வெடிப்பு. (யாழ். அக.).

நுழு—நூழ்—நூழில்=1. குழி. 2. குழியுள்ள செக்கு. (அக. நி.). 3. கொன்று குவிக்கை. "ஒள்வாள் வீசிய நூழும்" (தொல். புறத். 17).

நூழிலர்=செக்கார், வாணியர்.

நூழிலாட்டு=செக்காட்டுவது போற் கொன்று குவிக்கை.

நுள் — நொள். நொள்ளுதல் = 1. மொள்ளுதல், முகத்தல். "குடங்கையி னொண்டு கொள்ளவுங் கூடும்" (சிலப். 10 : 85). 2. விழுங்குதல். (திவா.).

நொள்—நொள்கு. நொள்குதல்=மொள்ளுதல், முகத் தல்.

மொள்ளுதல் நீர்ப்பொருளையும், முகத்தல் கூலம் போன்ற பொருளையும், துளைத்தல் போன்றவே

நொள்—நொள்ளல்=1. குழிவு. 2. பார்வை யற்றுக் கண் குழிந்த நிலை. (W).

நொள்—நொள்ளை = கண் குழிந்த குருடு. "நொள்ளை நாகில" (திருவிளை. பரிநரி. 14).

நொள்—நெள்—நெள்ளல் = பள்ளம், குழிவு.

நெள்ளல்—ஞெள்ளல் = 1. பள்ளம், பள்ளம் விழுந்த தெரு. "கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்" (புறம். 15). 2. குற்றம். ஞெள்ளுதல் = பள்ளமாதல்.

நொள்—நொடு—நொடி = வண்டிப் பாதையி லேற்பட்ட குழிப்பள்ளம். பாதை நொடியா யிருக்கிறது. (உ. வ.).

நொள்—நொண்டல் = நுகர்கை. (திவா.).

நொள்—நொண்டு—நெண்டு. நெண்டுதல் = தோண்டுதல். (நாமதீப. 737).

நொண்டு—நண்டு. நண்டுதல்—கிண்டுதல், கிளறுதல்.

நண்டல் = கிண்டிக் குழைத்த வுண்டி. நண்டல் கிண்டிப் படைக்கிறது என்பது உலக வழக்கு.

நண்டற் சோறு = கிண்டிச் சமைத்த பொங்கற் சோறு. நண்டல் பிண்டல் = உண்ணற் காகாவாறு கூழுங் கட்டியுமாகச் சமைத்த சோறு. சோற்றை நண்டல் பிண்டலாக்கி விட்டான். (உ. வ.).

நண்டு = 1. வண்டலிலும் மணலிலும் கிண்டினுற் போற் கீறிச் செல்லும் நீருயிரி (crale). 2. நண்டு வடிவான கடக வோரை. நண்டு—ஞண்டு. (தொல். சொல். 452, உரை)

ம. நண்டு. தெ. எண்டிரி (எண்ட்ரி).

நெண்டு—ஞெண்டு. ஞெண்டுதல் = கிண்டுதல். (சூடா.).

ஞெண்டு = நண்டு. "வேப்புநனை யன்ன நெடுங்க ணீர் ஞெண்டு" (அகம். 176).

நொள்—நோள்—நோண்டு. நோண்டுதல் = 1. தோண்டுதல். கண்ணை நோண்டி விடுவேன், கிழங்கை நோண்டி யெடுத்து விட்டான். (உ. வ.). 2. கிளறுதல். (பிங்). 3. முகத்தல். (திவா.). 4. குடைந் தெடுத்தல். 5. துருவி வினவுதல். நோண்டி நோண்டிக் கேட்கிறுன். (உ. வ.). 6. அடாததில் கையிடுதல். அங்கே என்னத்தை நோண்டிக் கொண்டிருக்கின்றுய்? (உ. வ.). ம. நோண்டுக.

நோண்டு – நேண்டு — நேடு.

ஒ. நோ : தோண்டு—தேண்டு—தேடு.

நேடுதல்=1. தேடுதல். "கொண்டவ னிருப்ப மற்றோர்... ....... வேலினுனை நேடிய நெடுங்கணாளும்" (சீவக. 252). 2. பொருளீட்டுதல். 3. விரும்புதல். (யாழ். அக). 4. எண்ணுதல். சூரபன்ம னிளவறன் முடிவுநேடி" (கந்தபு. அசுரேந். 65). 5. இலக்காகக் கொள்ளுதல். (W).

நேடு—நேட்டம்=ஈட்டிய பொருள். (நாஞ். வ.).

நாலிகேரம் என்னும் சொல் வரலாறு :

வடமொழியில் தென்னைக்கு நாலிகேர என்று பெயர். அதினின்று கேரளம் என்னும் சொல்லைத் திரிக்கவுஞ் செய்வர். நாலிகேர என்பது வடமொழியில் தன்னந் தனிச்சொல். அதற்கு அம்மொழியில் மூலமில்லை. கேரளம் என்பது சேரலம் என்பதன் திரிபா யிருக்கவும், அத்திரிவைத் தலைகீழாகக் காட்டுவது வடமொழியாளர் வழக்கம்.

தென்னை இயற்கையாகத் தோன்றிய நிலம் குமரிநாடு. குமரிக் கண்டத் தென்பாக நாற்பத் தொன்பது நாடுகளுள் ஒரு பகுதி ஏழ்தெங்கநாடு. தென்னை தென்கோடியில் தோன்றிய தனாலேயே, தென்றிசை அதனாற் பெயர் பெற்றது.

தென்னுதல் கோணுதல், சாய்தல். இயல்பாகக் கோணுவதனாலேயே முடத் தெங்கு என்னும் அடைமுதற்சொல் எழுந்தது.

தென்—தென்னை. தென்—தென்கு—தெங்கு. தென் = தெற்கு. தென்+கு=தெற்கு. ஒ. நோ : வடக்கு (வடம்+கு), கிழக்கு (கீழ்+கு), மேற்கு (மேல்+கு).

தென்னைக்கு நெய்தல் நிலம் மிக ஏற்றதாதலால், நெய்தல் மிக்க சேர நாட்டில் தென்னை தொன்றுதொட்டுச் சிறப்பாகச் செழித்தோங்கி வளர்கின்றது. தீயர் (தீவார்) இலங்கையினின்று வந்தவரேனும், தென்னை குமரி நாட்டுத் தொடர்புடையது.

அரிசி அல்லது நெல்லளக்கும் படி முதன் முதல் மூங்கிற் குழாயாலேயே அமைந்தது.

நுள் — நள் — நாள்—நாளம் = உட்டுளை, உட்டுளைப் பொருள், தண்டு.

நாளம்—நாளி = உட்டுளையுள்ள மூங்கில், புறக்காழது.

நாளி—நாழி = மூங்கிற்படி, படி.

"புறக்கா ழனவே புல்லென மொழிப"

என்னும் தொல்காப்பிய மரபியல் நூற்பாவால் (86) தென்னையும் மூங்கிலொடு சேர்ந்து நாளியினமாம்.

வேந்தன் குடிப்பெயரினின்று அவன் நாட்டுப் பெயர் திரிவதுண்டு.

எ-டு: பாண்டியன் — பாண்டியம் = பாண்டிநாடு. இம் முறைப்படி, சேரலன்—சேரலம், சேரன்—சேரம் என்று திரியும்.

தென்மொழிச் சகரம் வடமொழியிற் ககரமாகத் திரிவதால், சேரலம்—கேரள(ம்), சேரம்—கேர(ம்) என்றும்.

ஆகவே, நாலிகேர என்பது, சேரநாட்டில் சிறப்பாக வளரும் மூங்கிலொத்த புறக்காழ்த் தென்னை என்று பொருள் படலாம். (வடமொழியிற் சொன்முறை மாறும்).

நாலிகேர என்பது, தமிழில் நாளிகேரம் என்னும் வடிவே கொள்ளும்.

"வெள்ளை நாளிகேரம் விரியா நறும்பாளை" (தேவா. 106 : 5).

முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப் புலந்தொகுத்த போக்கறு பனுவலாகிய தொல்காப்பியம்,

"உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி யிகரம் மெய்யொடுங் கெடுமே
டகரம் ஒற்றும் ஆவயி னான" (240)

"திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்
தெற்கொடு புணருங் காலை யான" (432)

என்று கூறுவதினின்று, மூங்கில் போன்றே தென்னையும் குமரி நாட்டுத் தொன்மை யுடைமை உய்த்துணரப் படும்.

நாளி—நாடி—நேடி = மூங்கில். (மலை.).

# நம்பியின் வினாவும் நங்கையின் விடையும்

[புலவர் இரா. இளங்குமரன்]

வளமான வயல்; வாய்த்த ஏரி; பகைவரைத் தடுக்கும் வல்லாண்மை மதில்; ஆழ்ந்த அகழ்; பக்கமெல்லாம் பறவைப் பாட்டு-இவற்றைக் கண்டு கண்டு களிப்புற்றான் ஒரு கட்டிளங் காளை! அவன் சுற்றிப் பார்த்த பார்வையில் ஓர் ஊர் தெரிந்தது. அதன் அருகே ஆறு ஒன்றும் ஓடியது. அவ் வாற்றிலே நீராடிக் கொண்டிருந்தாள் ஓர் அழகு நங்கை. அவளைக் கண்டு, "சேயரி உண் கண்ணாய், தையலாய், உன் ஊர்ப் பெயர் யாது? ஒத்துணரும் வண்ணம் உரை" என்றான்.

*"சிற்றாறு பாய்ந்தாடும் சேயரி உண்கணாய்!*
*பற்றா வளவயலும் வாய்மாண்ட ஏரியும்*
*பற்றார்ப் பிணிக்கும் மதிலும் படுகிடங்கும்*
*ஒப் ! உடைத்தாய் ஒலியோவா நீர்ப்புட்கள்*
*தத்தி இரைதேரும் தையலாய் நின்னூர்ப்பேர்*
*ஒத்தாய வண்ணம் உரை"*

நயமுறக் கேட்ட நம்பியின் வினாவுக்கு நங்கை தன் ஊர்ப் பெயரை நவின்றாளா? ஆம் நவின்றாள்! எப்படி? வெளிப் படையாகக் கூறாமல், வினாவில் அமைந்தவாறு ஒத்து உணரும் வண்ணம் குறிப்பாக உரைத்தாள்.

*"கட்டலர் தாமரையுள் ஏழும் கலிமான்தேர்க்*
*கத்திருவ ருள் ஐந்தும் காயா மரமொன்றும்*
*பெற்றவிழ் தேர்ந்துணாப் பேயின் இருந்தலையும்*
*வித்தாத நெல்லின் இறுதியும் கூட்டியக்கால்*
*ஒத்தியைந்த தெம்மூர்ப் பெயர்"*

என்றாள்.

இவ்வினாவும் விடையும் அமைந்த பாடலைப் பன்னிரண் டடியான் வந்த இன்னிசைப் பஃறொடை வெண்பாவிற்கு எடுத்துக் காட்டாக உரையாசிரியர் காட்டியுள்ளார். (தொல். செய். 114) இதே பாடலைக் காட்டி "இது பன்னீரடியாற் பெரு வல்லத்தைச் சொன்ன பஃறொடை வெண்பா" என்று குறிப் பெழுதி இப் பாட்டுப் பூட்டைத் திறத்தற்குத் தாழ்க்கோல் உதவியுள்ளார் யாப்பருங்கல விருத்தி யுடையார் (யா. வி. 62). எனினும் பூட்டைத் திறத்தற்கு அரிதாகவே உள்ளது.

தொல்காப்பிய இளம்பூரணர் உரைப் பதிப்புக்கள், யாப்பருங்கல விருத்திப் பதிப்புக்கள் ஆகியவற்றில் இப்பாடற் பொருளமைதி விளக்கப் பெறவில்லை. பெருந்தொகைத் திரட்டில் இப்பாடல் இடம் பெற்றிருந்தும் (2141) அதன் குறிப்புரையில் பொருள் விளக்கம் காட்டப் பெறவில்லை. யாப்பருங்கலப் புதிய பதிப்பில் அவ்வாறு விட்டுச் செல்ல விரும்பாமையால் இப்பாடற் பொருள் ஆராய்ச்சியில் பெரிதும் ஆழ்ந்து கண்ட விளக்கமே இக் கட்டுரையாம்.

'பெயர் விழையார்' என்பார் செந்தமிழ்த் தொகுதி 16 பகுதி 2 இல், 'பெருவல்லம்' ஒரு நூற்பெயராமா? என்ற தலைப்புடன் ஓர் ஆராய்ச்சியுரை எழுதியுள்ளார். அவ்வாராய்ச்சிக் கட்டுரையுள் தம் நண்பர் சிலர்க்கும், புலவர் சிலர்க்கும் இப்பாடற் பொருள்பற்றி அவாவிக் கேட்டும் தாம் பயன் பெறவில்லை என்று கூறி இப் பாடற்குத் தாம் பொருள் கண்டறிந்த வகையைக் குறித்துள்ளார்.

''சேயரி உண்கணாய், தையலாய் நின் ஊர்ப் பெயர் உரைத்தி எனக் கூற, புருவத்தாள் ஏழும் ஐவரும், ஒன்றும், இருதலையும், இறுதியும் பெற்றக்கால் இயைந்தது என்ருள் எனக் கூட்டி முடித்துக் கொள்க.

பொருள் : ஏழு—பகரத்தில் ஏழாவது எழுத்து—பெ
ஐவர்—ரகரத்தில் ஐந்தாவது எழுத்து—ரு
ஒன்று—வகரத்தில் முதலாவது எழுத்து—வ
இருதலை—லகரத்தில் ஒரு தலை—ல்
ஷை மற்ருெரு தலை—ல
இறுதி—மகரத்தில் இறுதி—ம்

ஒத்தியைந்தவாறு பெருவல்லம்.

இவ்வாராய்ச்சிக் குறிப்பைக் கண்ணுற்ற புலவர் சிதம்பர புன்னைவனநாத முதலியார் அவர்கள் இதற்கு மறுப்பாக, செந்தமிழ்த் தொகுதி 16 பகுதி 6இல், ''சிற்றியாறு .....வேற் புருவத்தாள்'' என்ற செய்யுளின் பொருளை விரித்து, கட்டலர் தாமரை, கலிமான் தேர்க் கத்திருவர், காயாமரம், பெற்றவழித் தேர்ந்துண்ணப் பேய், வித்தாத நெல் இவ்வைந்து தொடர்களும் இன்னின்ன பொருளைக் குறிப்பன என்பதை விளக்கி ஏழு, ஐவர், ஒன்று, இருதலை, இறுதி என்பவை இன்னின்ன சொற்களினின்றும் எடுக்கப் பெற்றுப் பெருவெல்லம் என்று புணர்க்கப்படும் என்பதை விரித்துக் காட்டாது வாசிப்போரை

மயங்க வைத்தது விசனகர மானது. நம் நண்பர் பெருவல்லம் என்றது ஷி செய்யுளினின்றும் இன்னவாறு பெறப்படுவது என்பதைக் கூடிய விரைவில் விளக்குவாராக'' என்று எழுதி ஞர்.

செந்தமிழ்த் தொகுதி 16 பகுதி 7 இல் திரு. நா. கனகரா சையர் அவர்கள் ''அறியாமை வினு'' என்று தலைப்பிட்டு எழுதி அதன் இறுதியாக,

> ''சிற்றியாறு....வேற்புருவத்தாள் என்ற செய்யுளிற் குறிப்புப் பொருள் குறித்த தெவ்வாறு? கட்டலர் தாமரை யுள் ஏழு என்ருல் என்னே? கத்திருவர் ஐவர் யாவர்? காயாமரமொன்று என்பதில் குறிப் பென்னே? பேயின் இருதலே என்பதின் உட்கிடை என்னே? வித்தாத நெல்லின் இறுதியாவது யாது? இவ் வைந்தும் சேர்த்துப் பெறும் மொழி யாது? யாப்பருங்கல விருத்தி யாசிரியர் பெருவல்லம் என்னும் ஊர்ப் பெயரை எவ்வாறு அறிய வைத்தார்? அப் பெரு வல்லம் என்னும் பெயரைக் கொணர்தற் பொருட்டு (ப, ர, வ, ல, ம) இம் மெய்களே எங்கிருந்து பெறலாம்? இம் மெய்களே எடுத்தாண்டு குறிப்பை வெளிப்படுக்கச் செய்யுளில் அதிகார முண்டோ? இவ் வெழுத்துக்களேக் குறித்து ஏதேனும் அச் செய்யுளில் வந்திருப்பின் தெரிவிக்க வேண்டுகிறேன். அன்றி வேறு வகையால் பொருள் உணரக் கூறுமாயின் அதையும் அறிவான் உயர்ந்தோர் அறிவிப்பாராக''

என எழுதினர்.

இவ் வாராய்ச்சியில் உன்னிப்பாக ஈடுபட்ட புலவர் திரு. இராமையங்கார் என்பார் செந்தமிழ்த் தொகுதி 27 பகுதி 3 இல், ''திரு. கனக ராசையர் பல விஞக்களே எழுப்பினர். பெயர் விழையார் விடை யாதும் கூறவில்லே. யாரும் எம்முடிவுங் கூற வில்லே. இது விசயம் இம்மட்டோடு அடங்கிவிட்டது. யானும் இவற்றை யெல்லாம் நோக்கிய பொழுது பலவாறு சிந்தித்த துண்டு. கட்டலர் தாமரையுள் ஏழு என்பது தாமரையைக் குறிக்கும் ஏழுக்கு மேற்பட்ட எழுத்துக்களேயுடைய ஒரு சொல்லில் 'பெ' என்ற எழுத்து ஏழாவது எழுத்தாய் அமைந் திருக்க வேண்டும் என்றும், மற்றவையும் அவ்வச் சொற்களில் அப்படியே அமைந்திருக்க வேண்டு மென்றுங் கருதிச் சில பொழுது முயன்று நிறைவேருமையால் பயனில் முயற்சி யெனக் கைவிட நேர்ந்தது. இருந்தாலும் இதைக் கண்டறிய வேண்டும்

என்னும் அவா நீங்கவில்லை. அண்மையில் தொல்காப்பியச் செய்யுளியல் உரையைத் திருப்பிய பொழுது இச் செய்யுள் தென்பட்டது. உடனே கட்டலர் தாமரை முதலியவற்றிலே சிந்தனை செல்வதாயிற்று. புதிய வழி யொன்று தென்பட்டது. முன் நினைத்ததுபோல் இச் செய்யுளின் பொருள் அவ்வளவு சிரமம்பட்டு அறியத் தக்கவாறு அமைந்திருக்கவில்லை என்பதும் தெரிந்தது. ஒருவாறு முடிவும் ஏற்பட்டது. என் சிற்றறிவிற் கெட்டிய அம்முடிவைக் கீழே தருகின்றேன்'' என்று கூறிப் பாடற் பொழிப்புரை வரைந்து, ''இதனால் பெருவல்லம் எனப் பெயர் பெறப்படுமாறு'' என விளக்கியுள்ளார்.

''தாமரை என்பது இங்கு அதன் பரியாய நாமமாகிய பங்கயம் என்பதைக் குறிக்க, 'ஏழு' என்பது அச் சொல்லின் முதலில் உள்ள பகரவர்க்கத்தின் ஏழாவது எழுத்தாகிய 'பெ' என்பதைக் குறித்தது. எனவே கட்டலர் தாமரையுள் ஏழு என்பது 'பெ' என்னும் எழுத்தைக் குறிப்பான் உணர்த்துவதாயிற்று.

''கலிமான் தேர்க் கத்திரியர் ஐவர் என்பதில் கத்திரியர் என்பது அதன் பரியாய நாமமாகிய அரசர் என்பதைக் குறிக்க ஐந்து என்பது அதிலுள்ள ரகரத்தில் ஐந்தாம் எழுத்தாகிய 'ரு' என்னும் எழுத்தைக் குறித்தது. கத்திரியர் என்றதற் கேற்ப 'ஐவர்' என்று உயர்திணையாற் கூறினர். கத்திரியர்—க்ஷத்திரியர் = அரசர்.

''காயாமரம் என்றது அதன் பரியாயம் ஆகிய பூவை என்னும் பெயரைக் குறிக்க ஒன்று என்பது அதிலுள்ள (வை) வகர வர்க்கத்தில் முதலெழுத்தாகிய வ என்னும் எழுத்தைக் குறித்தது.

''பேய் என்பது அதன் பரியாய நாமம் ஆகிய அலகை என்பதைக் குறிக்க அதன் இருதலை என்பது அதிலுள்ள லகரத்தின் இறுதியும் முதலும் ஆகிய ல், ல என்னும் எழுத்துக்களை முறையே குறித்தது.

''வித்தாத நெல் என்றது விதைத்து விளையாமல் தானே விளையும் நெல்லின் பெயராகிய நீவாரம் என்பதைக் குறிக்க இறுதி என்பது அதிலுள்ள மகரத்தின் இறுதியாகிய ம் என்னும் எழுத்தைக் குறிப்பதாயிற்று.

''இனி, சேர்த்தக்கால் என்று செய்யுளில் கூறிய வண்ணம் இவற்றைச் சேர்த்தால் பெ—ரு—வ—ல்—ல—ம் = பெருவல்லம் என ஒத்தியைந்தவாறு கண்டு கொள்க.''

இவ் வாராய்ச்சித் தொடர்கதை நிறைவு தந்திலது. புலவர் இராமையங்கார் கூறியது போல் வெள்ளிடை மலையாக விளங்கவும் இல்லை. ஆதலால் பொருள் காணும் ஆர்வம் மீதூரப் பெற்று ஆய்வில் தலைப்பட்டேன். அம் முயற்சியின் பயனால் விளைந்த பொருள் விளக்கத்தை வரைகின்றேன்

தாமரையுள் ஏழு என்பது முதற் குறிப்பு. இக் குறிப்பின் விளக்கம் 'தாமரை என்பதனுள் என் ஊர்ப் பெயரின் ஏழாம் எழுத்து உள்ளது' என்பதாம் ஏழு என்னும் குறிப்பால் அவள் சுட்டும் ஊர்ப் பெயர் ஏழு எழுத்துக்கட்கும் மிக்க எழுத்துடைய தாக இருக்க வேண்டும் என்பது புலனாயிற்று. மற்றும் வித்தாத நெல்லின் இறுதி என்றதால் ஏழற்கு மேலேயும் எழுத்து இருக்க வேண்டும் என்றும் குறைந்தது எட்டு எழுத்துக்களேனும் அவ் வூர்ப் பெயரில் இருத்தல் வேண்டும் என்றும் திட்டமிட்டேன். ஆனால், விருத்தியுரை 'பெருவல்லம்' என்று ஆறு எழுத்துக்களை யன்றோ குறிக்கின்றது!

பெருவல்லம், திருவல்லம் வல்லம் வல்லை என்னும் பெயர்களாலும் அழைக்கப் பெறும். பெருவல்லம் சேக்கிழார் அடிகளாரால் திருக்குறிப்புத் தொண்டர் புராணத்தில்,

> ' தீது நீங்கிடத் தீக்காலி யாமவு ணற்கு
> நாதர் தாமருள் புரிந்தது நல்வினைப் பயன்செய்
> மாதர் தோன்றிய மரபுடை மறையவர் வல்லம்
> பூதி சாதனம் போற்றிய பொற்பினால் விளங்கும்" (30)

என்று புகழப் பெற்றுள்ளது இத் திருப்பாடலில் தீக்காலியாம் அவுணற்கு அருள் புரிந்த பேறு கூறப்பெற்றுள்ளது. அவ் வருட்பேறு கருதி வல்லத்திற்குத் 'தீக்காலி வல்லம்' என்னும் பெயர் உண்டாயிற்று.

வடார்க்காடு மாவட்டம் திருவல்லம் சிவன் கோயில் கருவறைத் திருமதில் ஒன்றில் கண்ட கல்வெட்டில் திருத் தீக்காலி வல்லத்துக் கோயில் உண்ணாழிகை அதிகாரிகள் குறட்டி வரதையன் என்ற புலவர்க்கு அவர் அக்கோயிற் சிவ பெருமான் மேல் திருவல்லை யந்தாதி பாடியதற்காக 100 குழி நிலம் இறையிலி வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது (M. E. R. 233 of 1921 p. 15 ; சாசனத் தமிழ்க் கவி சரிதம் பக். 208). இதனால் திருவல்லத்திற்குத் தீக்காலி வல்லம் என்னும் பெயருண்மை கல்வெட்டால் தெளிவுறுத்தப் பெறுதல் கொள்ளத் தக்கதாம். 'தீக்காலி வல்லம்' என்னும் எட்டெழுத்துப்

பெயரை ஒத்துரைக்கும் வண்ணம் உரைத்ததே இப்பாடல் என்பதைக் காணலாம்.

**கட்டலர் தாமரையுள் ஏழு:**

தாமரையுள் ஏழாம் எழுத்து உள்ளது. 'நீங்காலி மல்லம்' என்பதில் ஏழாம் எழுத்து 'ல'. இவ்வெழுத்து தாமரையின் ஒரு பெயராகிய கமலம் என்பதில் அமைந்துள்ளமை அறிக.

**கலிமான் தேர்க்கத்திருவருள் ஐந்து**

கலிமான் தேர் - விரைந்த செலவுடைய குதிரை பூட்டிய தேர். கத்திருவர் - அரசர். 'கத்திருவர்' என்பதில் ஊர்ப் பெயரின் ஐந்தாம் எழுத்துள்ளது. ஐந்தாம் எழுத்து 'ரு' இப் பெயரிலும் அஃது ஐந்தாம் எழுத்தாய் அமைந்துள்ளமை அறிக. 'கத்திருவர் ஐவரும்' என்பது நூற்பாடமாக உள்ளது. கத்திருவர் என்பதற்கு ஏற்ப ஐவர் என எழுத்தைக் கூறினர் என்பர். ஆயின் 'ஐந்தும்' என்பதே சரியான பாடமாக இலக்கலாம் என்பது பாடல் அமைதியால் தெளிவாகும்.

**காயாமரம் ஒன்றும்**

காய்க்கும் மரம், பெண்மரம்; காயாமரம், ஆண்மரம்.

*"அகக்காழ் வன்மரம் ஆண்மர மாகும்*
*அவைகருங் காலி முதலா யுள்ளன"*

என்பது திவாகரம். ஊர்ப்பெயருள் காயாமரம் ஒன்றுளது என்றாள். அம் மரம் 'கருங்காலி' என்பதாம். அதனைக் 'காலி' என்று குறித்தார்.

**பெற்றவிழ் தேர்ந்துண்ணுப் பேயின் இருந்தலை**

எவ்வுயிரி ஆயினும் எல்லாப் பொருள்களையும் உண்பது இல்லை. தேர்ந்து உண்ணத் தக்கவற்றை - விரும்புமவற்றை மட்டுமே உண்ணும். அவ்வாறு தேர்ந்து உண்ணுமல் எதனையும் உண்ணும் ஒன்று தீ. உண்ணுவது எரிப்பது. ஐம்பெரும் பூதங்களுள் ஒன்று தீ; ஆதலால் பேய் என்றார். இருந்தலை யாவது பெரிய தலை. தலையாவது முதல் எழுத்து. அது 'தீ' என்னும் ஒரே முதலாக அமைந்த நெட்டெழுத்தைக் குறித்தது. இருதலை என்பது பாடவேறு. அவ்வாருயின் 'தீ' என்பது ஓரெழுத்து ஒருமொழி ஆதலால் முதல் ஈறு ஆகிய இருதலையும் அதுவே என்க.

**வித்தாத நெல்லின் இறுதி**

வித்தாத நெல், விதையிட்டு விதைக்காமல் தானே விளையும் நெல். வித்தாத நெல்லின் இறுதியும் ஊர்ப் பெயரில் அமைந்துள்ளது. அஃதிரட்டுறலாக நெல்லின் இறுதி, ஊர்ப் பெயர் இறுதி இரண்டையும் சுட்டியதென்க.

பாரியின் பறம்பு மலை வளத்தைப் பாடும் கபிலர்,

> *"உழவர் உழாதன நான்குபய னுடைத்தே*
> *ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே"*

என்கிறார். வெதிரின் நெல் மூங்கில் நெல். அது வெதிரம் எனவும் பெறும். "புல்லிலை வெதிர நெல்விளை காடே" என்பது கயமனார் பாடிய அகப்பாட்டின் அடி (அகம். 397). ஆதலால் வெதிரம் என்பதன் ஈருகிய 'ம்' என்பது ஊர்ப்பெயர் ஈருகவும் அமைந்தமை அறிக.

இனி 'ஐவனம்' என்னும் மலைநெல் எனலாமோ எனின் ஐவனத்தை வித்திய தாகவும் காத்த தாகவும் புறப் பாடல்கள் (159, 172) குறிக்கின்றன ஆதலின் வெதிரம் என்பதே தகும்.

'நீவாரம்' என்றுரும் உளரே எனின் நீவாரம் என்பது புல் என்பதன்றி நெல் என்னுர் என்க.

**ஒத்து இயைந்தது**

இவற்றை ஒத்த வண்ணம் இயைத்துப் பார்த்தலால், க் என்னும் மெய்யும் 'ல்' என்னும் மெய்யும் இடம் பெறும். இவ்வாறு மெய்களை இணைத்து முறைப்படுத்திக் கொள்வதையே ஒத்து இயைந்தது என்ருர் என்க.

**முறைவைப்பு வருமாறு**

*தேர்ந்துண்ணுப் பேயின் இருந்தலை—தீ*
*காயாமரம் ஒன்று—காலி*
*கத்திருவருள் ஐந்து—வ*
*தாமரையுள் ஏழு—ல*
*வித்தாத நெல்லின் இறுதி—ம்*

ஒத்து இயைத்தலால் வருவன - க், ல் இவற்றைச் சேர்த்தலால் '**தீக்காலி வல்லம்**' என்னும் பெயர் உருப்பெறுதல் காண்க.

பெருவல்லத்தின் பெயர்களுள் ஒன்று 'தீக்காலி வல்லம்' என்பதாகலின் இவ்வாறு குறித்தார் என்க.

பாடல் வருமாறு

*சிற்றியாறு பாய்ந்தாடும் சேயரி உண்கணாய்*
*வற்றா வளவயலும் வாய்மாண்ட ஏரியும்*
*பற்றார்ப் பிணிக்கும் மதிலும் படுகிடங்கும்*
*ஒப்ப உடைத்தாய் ஒலியோவா நீர்ப்புட்கள்*
*தத்தி இரைதேரும் தையலாய் நின்னூர்ப்பேர்*
*ஒத்தாய வண்ணம் உரைநீ எனக் கூறக்*
*கட்டலர் தாமரையுள் ஏழும் கடுமானதேர்க்*
*கத்திருவ ருள்ளைந்தும் காயா மர மொன்றும்*
*பெற்றவிழ்தேர்த் துண்ணு த பேயின் இருந்தலையும்*
*வித்தாத நெல்லின் இறுதியும் கூட்டியக்கால்*
*ஒத்தியைந்த தெம்மூர்ப் பெயரென்றாள் வானவன்கை*
*விற்பொறித்த வேற்புருவத் தாள்.*

---

## தென்னிந்திய தமிழ்ச்சங்கத் தேர்வு
## 1973இல் நடைபெற்ற தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வில் பரிசு பெற்றோர் விவரம்

*618.* பி. கிருஷ்ணமூர்த்தி, முதனிலை
கே. வி. எஸ். எஸ். கல்லூரி, திருப்பனந்தாள்
முதல் பரிசு ரூ. 40—00

*701.* பி. சாந்தா, முதனிலை
பழனியாண்டவர் மகளிர் செந்தமிழ்க் கல்லூரி.
இரண்டாம் பரிசு ரூ. 30—00

*788.* வி. இலட்சுமி, முதனிலை
பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
மூன்றாம் பரிசு ரூ. 20—00

*414.* பி. இ. அரங்கசாமி, இறுதிநிலை
கே. வி. எஸ். எஸ். கல்லூரி, திருப்பனந்தாள்.
முதல் பரிசு ரூ. 50—00

*551.* எம். புனிதவல்லி, இறுதிநிலை
பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
இரண்டாம் பரிசு ரூ. 35—00

*488.* எஸ். சிரோமணி, இறுதிநிலை
இளங்கோ தமிழ்க் கல்லூரி, பெருமாள்புரம்.
மூன்றாம் பரிசு ரூ. 25—00

ரூ. 200—00

# தமிழுக்கு ஒரு நற்பணி

[டாக்டர் சாலை இளந்திரையன்]

சிறிது காலத்துக்கு முன்பு நாம் அடிமைகளாக இருந்தோம். அந்த நிலையிலிருந்து நாம் கரையேற நமக்கு ஓர் எழுச்சி தேவைப்பட்டது. அதனை உண்டாக்குதற்கு நம் பழைய பெருமைகளை ஓங்கி முழக்க வேண்டியிருந்தது.

**ஆயிரம் மொழியில்...**

அந்த முழக்கத்தைச் செய்து கொண்டிருந்த சுப்பிரமணியக் கவிஞர்,—அந்த முழக்கிலேயே நாம் மயங்கிக் கிடந்து விடக் கூடாது என்று கருதியவர் போல,

*மறைவாக நமக்குள்ளே*
*பழங்கதைகள் சொல்வதிலோர்*
*மகிமை இல்லை ;*
*திறமான புலமையெனில்*
*வெளிநாட்டார் அதை வணக்கம்*
*செய்தல் வேண்டும் !*

என்று சுட்டிககாட்டி வற்புறுத்தினர். அந்த வற்புறுத்தை நெஞ்சில் ஏற்று,

*தாயெழில் தமிழை,—என்றன்*
*தமிழரின் கவிதை தன்னை—*
*ஆயிரம் மொழியிற் காண*
*இப்புவி அவாவிற்று என்ற*
*தோயுறும் மதுவின் ஆறு*
*தொடர்ந்து என்றன் செவியில்வந்து*
*பாயும்நாள் எந்த நாளோ ?—*
*ஆரிதைப் பகர்வார் இங்கே ?*

என்று, ஏக்கக் கனவு கண்டார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். அஃதாவது,—"குண்டுசட்டிக் குள்ளே குதிரை ஓட்டுவது போல" நமது பெருமையை நமது செவிக்குள்ளேயே இரைந்து கொண்டிருந்தால் போதாது,—அவை உலகுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்" என்று இந்தக் கவிஞர்கள் விரும்பினர்கள். இதே எண்ணம், இவர்களைத் தொடர்ந்து வந்த பலராலும் எடுத்து நினைவூட்டப்பட்டே வந்துள்ளது. ஆனாலும், அந்த எண்ணம்

போதிய அளவு நிறைவேறியிருப்பதாகச் சொல்ல முடிய வில்லை.

**'கண்டு பிடிக்கப்படாத மக்கள்!'**

உலகின் பிறமொழிகளில் உள்ள கலைக்களஞ்சியங்களையும், பொருள் விளக்க ஏடுகளையும், தகவல் சுவடிகளையும் பார்க்கின்ற போது, நம்மைப் பற்றிய செய்தி வடவேங்கடத்துக்கு வெளியே தேவையான அளவில் பரவவில்லை என்பதே உண்மையாக இருக்கிறது. உலகின் அறிவுத் தகவல் ஏடுகளாக ஆங்கில மொழியில் வெளிவந்துள்ள பலவேறு (பொதுக்) கலைக்களஞ்சி யங்களில் தமிழ், தமிழர், உலகநாகரிகச் சிந்தனைக்குத் தமிழர் ஏற்றிய ஊட்டம் என்பவை பற்றிய செய்திகளையே காண முடிய வில்லை! பழைமையான சீனத்தைப் பற்றி, இடைக்கால இஸ்லாமியத்தைப் பற்றி, புதுமையான சப்பானைப் பற்றி,— பிரெஞ்சு, செர்மனி, ஆஸ்திரியா, ருசியா, இத்தாலி என்பவற் றைப் பற்றிப் பரக்கப் பேசும் இந்த ஏடுகளில் தமிழ்ச்செய்தி இல்லவே இல்லை!

இந்த நிலைக்குக் காரணம் என்ன? நம்மைப்பற்றியும் நமது நெடுவரலாற்றைப் பற்றியும் நம் மக்களின் காதுகள் செவிடு படும் அளவு முழக்கி வருகிற நாம், அச்செய்திகள் ஆங்கிலம் போன்ற மொழிகளில் ஏறி உலகப் பரப்பிலே உலவத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவில்லை. சில தனிமனிதர்களும் சில பதிப் பாளர்களும் தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்திலும் வேறுமொழி களிலும் ஆக்கி வெளியிட்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனாலும், அவற்றைப் படிப்போரும் அவற்றின் மூலம் செய்திகளைத் தெரிந்துகொள்ள முனைவோரும் மிகமிகக் குறைவே.

எங்கோ சில ஆல்பர்ட் சுவைட்சர்கள்,—மிக முயன்று நம்மைப் பற்றித் தெரிந்து கொண்டு,—நம்மைப் பாராட்டி நாலுவரி எழுதி விடுவதிலேயே நாம் சொக்கிப் போகிறோம். விரைந்த போக்குடைய வாழ்வில், அங்கங்கே நீர்க்குமிழிகள் போல் எழுந்து மறைந்து போகிற இந்தப் பாராட்டுரைகளால், நம்மைப் பற்றிய விவரம் உலகில் போதிய அளவு பரவ முடியாது; எல்லாரும் அந்தப் பெருமக்கள் சிலரின் புத்தகங் களைத் தேடிப் படிப்போராகவும் இருக்க முடியாது. எந்தத் துறையினரும் உலகின் முக்கியமான செய்திகளையும் கருத்துக் களையும் தெரிந்து கொள்ளக் கலைக்களஞ்சியம் போன்ற கருவி நூல்களையே நாடுகின்றனர்; அவற்றில் கிடைக்கும் விவரங்

களைக் கொண்டே குறிப்பிட்ட பொருளைப் பற்றித் தெரிந்து கொள்ளுகின்றனர். நம்மைப் பற்றிய செய்தி அவற்றிலே இல்லாவிட்டால்,—அவர்களைப் பொறுத்தவரை,—நாம் ''கண்டு பிடிக்கப்படாத மக்களா''கவே இருந்து விடுகிறோம்! ஆகவே, நம்மைப் பற்றி உலகுக்கு அறிவிக்க நாம் வேறு வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும்.

**'பெருமிதப் பகடுகள்....'**

தமிழர்களின் பெருமையை நிலைநாட்டிக் கொள்ளவே நமது சிந்தனைவளம் உலகுக்குத் தெரிய வேண்டும் என்பதில்லை; அந்தப் பெருமையை விட்டுக்கொடுக்கக்கூட நாம் ஆயத்தமாக இருக்கலாம். ஆனால், உலகின் பல பகுதிகளில் அவ்வப்போது முகிழ்த்த சிந்தனைகளின் கூட்டு இணைவே இன்று உலகை நடத்துகிறது; இனிமேலும் இந்த நடைமுறை தான் தொடரப் போகிறது. கடலிலே பிறந்த முத்து மலையில் பிறந்த பொன்னிலே பதிக்கப்பட்டு அழகிய அணிகலனாவது போல, உலக ஒன்றிணைவுக்கு நம்மை வழிநடத்தும் நோக்கும், ஆங்காங்குத் தோன்றிய உயர் எண்ணங்களின் சரியான, அளவான தொகுப்பினாலேதான் உருவாக வேண்டும்.

சில பெரிய எண்ணங்களும் அரிய உணர்ச்சிகளும் நமது நெடுவரலாற்றில் அவ்வப்போது தலையெடுத்திருப்பதை நமது இலக்கியம் காட்டுகிறது; வரலாற்றுச் சான்றும் அதற்கு அரண் செய்கிறது. அந்த எண்ணங்களும் உணர்ச்சிகளும், அவற்றிற்கு உரிமை படைத்த பெருமக்களும் உலகின் பார்வையிலிருந்து மறையுண்டு கிடப்பது உலகுக்கே பெரிய இழப்பு. அவற்றை உலகம் தெரிந்து கொள்ளும்போது, உலகம் பயன் பெறுவதோடு, தமிழராகிய நாமே சற்று நிமிர்ந்து நடப்போம்; ஒரு நீண்ட நாகரிகப் பாரம்பரியத்துக்கு உரிய நம்மை உலகின் மற்றவர்கள் அறிந்து மதிக்கும்போது, நாமும், நண்டு—நரி நடைகளைக் கைவிட்டு, 'வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும் பெருமிதப் பகடுகள்' ஆவோம்.

**என்ன செய்ய வேண்டும்?**

தமிழர்களின் பலதுறை மாண்பு என்னும் நறுமணப் பொருள், நமது தமிழ்மொழி என்னும் சுண்ணாம்புக் கரண்டகத்துள் மூடப்பட்டுத், தமிழகம் என்னும் வெற்றிலைச் செல்லத்துக்குள்ளேயே உருண்டு கொண்டு இருக்கின்றது. அந்த நறுமணப் பொருள் உலகம் என்னும் வீடெங்கும் மணம் வீச

நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். வெற்றிலை போடும் பழக்கம் உடைய சிலர் மட்டுமே, சுண்ணும்பு என்று திறந்து பார்த்து, எதிர்பாராமல் முகர்ந்து மகிழ்ந்த அந்த நறுமணத்தை வெற்றிலை போடாதவர்களும் அதையே தேடாதவர்களும் கூட நுகர்ந்து மகிழ வழி வகுக்க வேண்டும்.

நம்முடைய மொழி உலகமொழி என்னும் உரிமையைப் பெருத நிலையில், ஆங்கிலம், ருசியம், பிரெஞ்சு போன்ற மொழிகளின் மூலம் நமது பெருமையைப் பரப்புவதே இப்போது நாம் செய்ய வேண்டிய பணி; அதுவே காலத்துக்கு ஏற்ற தமிழ்ப் பணி. நமது வயலில் விளைந்த வாழைப்பழத்தைப் பெரிய சந்தைக்குக்கொண்டு சேர்க்க நம்மிடம் உள்ள மாட்டுவண்டி போதாது என்ருல், (சரக்கு உந்து என்னும்) லாரிகளை நாம் அமர்த்திக் கொள்ளுவதில்லையா? அவையும் போதா என்ருல், இரயில் 'வாகன்'களையோ விமானங்களையோகூட, நாம் அமர்த்திக் கொள்ளுவதில்லையா? அதே போல, நமது தமிழியத்தை ஆங்கிலம் போன்ற உலகமொழிகளில் ஆக்கிப் பரப்பவேண்டும்; விளம்பர யுகத்தின் தோரணையைப் புரிந்துகொண்டு, நமது தமிழியம் ஒவ்வொருவரையும் சென்று எட்டும் வழிவகைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

**தமிழ்வாணர்கள் யார், எவர்?** என்னும் தகவல் நூல் ஒன்று தயாரிக்க வேண்டும்; அதிலே தொல்காப்பியர், வள்ளுவர், சங்கப்புலவர்கள் முதல் இன்றுவரை உள்ள பல பெருமக்களையும் அவர்களின் சாதனைகளையும், தனித்தனியே விவரித்தும் உள்ளவாறு மதிப்பிட்டும் ஆங்கிலத்தில் எழுதவேண்டும். **தமிழ் வரலாற்றில் எது, எங்கே?** என்னும் விவரநூல் ஒன்று தயாரிக்க வேண்டும்; அதிலே தமிழ் மன்னர்களைப் பற்றியும் தமிழ் ஆட்சி அமைப்புக்கள், தமிழகச் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பற்றியும், வரன்முறையாகவும் காலத்தை ஒட்டிய ஆய்வுமுறையிலும் ஆங்கிலத்தில் எழுத வேண்டும். **பலதுறைத் தமிழ்ச் சிந்தனைக் களஞ்சியம்** என்னும் அகரமுதலி ஒன்று தயாரிக்க வேண்டும்; அதிலே தனிமனிதன், குடும்பம், அரசியல், பொருளியல், கலை—இலக்கிய இயல், வாழ்வியல் முதலானவை பற்றி இங்கே என்னென்ன சிந்தனைகள் (எவ்வெக் காலங்களில்) உண்டாயின என்பதை ஆங்கிலத்தில் எழுத வேண்டும். இப்படி இன்னும் எத்தனையோ தகவல் நூல்கள் வெளிவர வேண்டும் ......

இத்தகைய புத்தகங்கள் உலகுக்கு எட்டும்போதுதான், குறைந்த மக்கள் தொகையைக் கொண்டதாகவும் இந்திய

நாட்டின் ஒரு பகுதியாகவும் உள்ள தமிழகத்தைப் பற்றிய செய்திகளைப் பலர் அறிய வருவார்கள்; அவர்களின் மூலம் இந்தச் செய்திகள் வேறு பல தகவல் ஏடுகளிலும் இடம் பெறும். இப்போது போல, "எதிலும் நாம் இல்லையே!" என்று நாம் வாடும் நிலை நீடிக்காது. அவற்றைப் படிக்கின்ற மற்ற நாட்டவரும் மொழியினரும்—கவிஞரின் கனவு நனவாகும் வகையில்,—நமது மேன்மைச் செல்வங்களைத் தத்தம் மொழிகளில் ஆக்கிக் கொள்ளவும் முந்துவார்கள். நமது தமிழ்க் கலைக்களஞ்சியத்தையே எடுத்துப் பாருங்கள்: எங்கெங்கோ உள்ள யார்யாரையோ ஏதேதையோ பற்றி எல்லாம் அதில் தகவல் தந்திருக்கிறோமே! அதுபோல, நம் செய்திகள் ஏனைய களஞ்சியங்களில் இடம்பெற வேண்டாவா?.......

இந்தப் பணியில் அமெரிக்கர்களின் ஆர்வம் நமக்குப் பெரிதும் ஊக்கம் ஊட்டுவதாக இருக்கிறது; உலகப் புகழ் பெற்ற பிரித்தானியக் கலைக்களஞ்சியத்தில் அமெரிக்காவைப் பற்றிய செய்திகள் போதிய அளவில் இடம்பெறவில்லை என்று கருதிய அமெரிக்கர்கள், தங்களைப் பற்றி உலகுக்குத் தெரிவிப்பதற்காகவே ஒரு புதிய கலைக்களஞ்சியத்தை வெளியிட முனைந்து விட்டார்கள்: அதுவே, 'என்சைக்ளோபீடியா அமெரிக்கானா' என்னும் பெயரில் இன்று புகழோங்கியுள்ள அமெரிக்கக் கலைக் களஞ்சியம் இளைய அமெரிக்கருக்கு இளைத்தவர்கள் அல்லவே நாம்! உலகுக்கு எடுத்துச் சொல்லக்கூடாத அளவுக்கு இழிந்தவையோ கிழிந்தவையோ அல்லவே. நமது தமிழ்ச் சிந்தனைகள்! அமெரிக்கர்களின் ஆர்வப்பணி நமக்குப் புதியதோர் எழுச்சி தரவேண்டும்.

நுழையாது தடுத்து.......

இந்தப் பணிகளில் தமிழ் ஆர்வமும் உலகு தழுவிய பார்வையும் உள்ளவர்களையே ஈடுபடுத்த வேண்டும்; 'பிடிக்குப் பிடி நமச்சிவாயமா?' என்பது போல,—எதற்கெடுத்தாலும், "ஆஆ தமிழ்! ஓஓ தமிழ்!" என்று வியப்புக்குறி போட்டு, நமது நோக்கத்தையே திசை திருப்பிடுவோர் இதிலே நுழைந்து விடாதபடி தடுக்கவேண்டும். பிறநக்தத் தெரிய வேண்டிய அளவிலும் வகையிலும் நம்மைப்பற்றிய உண்மைகளைத் தரவேண்டும் என்ற ஓர்மையும் நிறைந்த தமிழார்வமும் உடையவர்களிடமே இந்தப் பணியை ஒப்படைக்க வேண்டும். குறிப்பாக, ஆரியம்—தமிழ் என்ற நமது போட்டி உணர்வுகளோ இந்தியா—தமிழகம் என்ற அரசியல் காழ்ப்பு உணர்வுகளோ இதில் தலையிடாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

உலகத்துக்கு உண்மையே போதுமானது; நாம் அதற்கு அணிமணிகள் பூட்டிக் கவர்ச்சி ஊட்ட வேண்டியதில்லை. பச்சையான உண்மையைவிட அழகானது வேறு என்ன இருக்கிறது? அதுமட்டுமன்று: நம்மைப் பற்றிய செய்திகளுக்கு நாமே பாராட்டுத் தோரணம் கட்டத் தொடங்கினால், 'அதில் உண்மை இராதோ?' என்று மற்றவர்கள் ஐயம் கொள்ளத் தொடங்கி விடுவார்கள்.

**யார் செய்ய வேண்டும்?**

தமிழகத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவியுள்ளோம்; அரசின் தமிழ் வளர்ச்சித்துறை ஒன்று இருக்கிறது; புதிதாகத் தமிழியல்துறை ஒன்றும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவை தவிர, நமது பல்கலைக் கழகம் ஒவ்வொன்றிலும் ஆராய்ச்சிப் பகுதியோடு கூடிய தமிழ்த்துறை இயங்கி வருகிறது.

இந்த நிறுவனங்களுள் ஒன்று மேற்கண்ட பணிகளில் ஈடுபடலாம்; பல நிறுவனங்கள் கூடித் திட்டமிட்டு அவற்றைச் செய்வதும் நல்லதே. இவற்றோடு நேரிடையாகத் தொடர்பு பட்டிராத அறிஞர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் தடையிருக்க வேண்டியதில்லை. நம்மிலே மிக இளையவர்களான பஞ்சாபியர்,—அரசுத் தொடர்புடைய மொழி வளர்ச்சித் துறை வாயிலாகவே,—இத்தகைய பணிகளைத் தீவிரமாகச் செய்து வருகிறார்கள். நமக்கோ, சொல்லுதற்குரிய செய்திகள் மெத்த உண்டு; சொல்லும் தகுதியும் ஆர்வமும் உடையோருக்கும் இங்கே பஞ்சமில்லை. இருந்தும், "தின்னப் படையுண்டு வெல்லப் படையில்லை" என்னும் பழமொழிக்கே நாம் இலக்கியமாக இருக்கலாமா? உலகத்தின் "கண்டுபிடிக்கப் படாத" மக்களாகவே நாம் இன்னும் எத்தனை காலம்தான் இருப்பது? செயல், செயல் என்றே துடிக்கும் இளந்தமிழ் நெஞ்சங்கள் இதுபற்றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்; தக்கவர்களை இந்தப் பணியிலே ஊக்கவேண்டும்.

---

## மொழி

*மொழி மனித உள்ளத்தின் படைக்கலச் சாலை. அதில் பழம் புகழ்ச் சின்னங்களுடன் வருங்காலப் புகழுக்குரிய போர்க் கருவிகளும் வைக்கப்பெற்றுள்ளன.*

—காலரிட்ஜ்.

# ஆப்பிரிக்கச் சுற்றுலா

## [கவியோகி சுத்தானந்த பாரதியார்]

(முன் இதழ் ௬௩ ௬ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 4. சிவசிவ முழக்கம்

**அப்பாலர்** (Aparthred)

என்-குழுவுக்கு லெனேசியா மணி வசதியான ஏற்பாடு செய்தார். அது ஜோ'பர்கிலிருந்து நாற்பது மைலில் உள்ளது. அஃது இந்தியர் இருக்க வேண்டிய இடம். அவரவர் குறித்த இடத்திலேதான் இருக்கலாம். வெள்-ளிடங்களை விலகியே வாழவேண்டும். வெளிடங்களில் பிழைப்பிற்காக உழைக்கலாம். ஆனல், இருப்பது தள்-இடத்திலேதான். அந்த இடமும் பண்பாடுப் பாங்காஞல் அதிலும் அவர் புகுவார்; இவர் காடோ கரையோ குடியேற வேண்டியதுதான். இப்படி அப்பாலராவதே அப்பார்த்திரு (Aparthred) என்பது. அப்பாலுக்கும் அப்பாலர் லெனேசிய இந்தியர் ஏறக்குறைய 1,00,000 பேர். இவருள் குசராதியர், மார்வாடிகள்-செல்வ நிலையில் இருக்கிறார்கள். தமிழர் சிறுசிறு விற்பனைகளால் சிறுமையின்றிப் பிழைக்கின்றனர். நான் இருந்த...பெலிக்ஸ் மணி பூக்கடை வைத்திருக்கிறார். இன்னொருவர் லெனேசியாவில் சாராயக்கடை வைத்திருக்கிறார். புட்டி புட்டியாகச் சாராயம் ஊற்றிக் கொடுக்கிறார்; தாம் குடிப்பதில்லை. எனது சிவநெறி விளக்கம் கேட்டு அவர் ஒரு சிவனுருவை வைத்து வணங்கியே வணிகம் செய்தார். ஓம் நம: சிவாய என்றே புட்டியை உடைப்பது. இவர் சிறந்த சிவபக்தராகி எனது தேவார மொழி பெயர்ப்புகளையும் Revelations of Meikandar (மெய்கண்டார் அருள் விளக்கம்) என்பதையும் கருத்துடன் கற்றார். நான் எழுதிய Yoga for All (எல்லாருக்கும் யோகம்) என்ற நூலின் மூன்றும் பதிப்பை இவரே பெருஞ் செலவில் வெளியிட்டார்—**லாலா வல்லபர்.**

**ரோய்தெறல்**

இன்னொரு சேராதி படேல் துணி விற்பவர். அவர் நல்ல செல்வர். அவருக்கு இடுப்புப் பிடிப்பு. நான் பச்சிலை போட்டு உருவிவிட்டு ஓர் ஆசனப் பயிற்சியும் தந்தேன். அன்று மாலையே அவர் இடுப்புப் பிடிப்பு நின்று துடிப்பு நடைபோட்டார். அவர் இதைக் குசராத்திகளுக் கெல்லாம் விளம்பரம் செய்ததுமே கும்பல் என்னைச் சூழ்ந்து கொண்டது. சிலர் தலைவலி, சிலர் வயிற்றுவலி, சிலர் பீனசம், சிலர் காய்ச்சல் என்று வந்தனர். பட்டினி, சூரத்தாவாரை கசாயம், தொட்டி முழுக்கு ஆசனம்

இவற்ருல் நோய்கள் தீர்ந்தன. எல்லாரும் எனக்கென்று 'ஜோ'பர்க்கு நகர மாளிகையில் பெருங்கூட்டம் ஏற்பாடு செய்து 'யோகமுனிவர் யோகவாழ்வு பற்றிப் பயிற்சியுடன் ஆங்கிலத்தில் விளக்கம் செய்வார். நாளை பெண்களுக்காக ஒரு கூட்டம்; இந்தியில் பேசுவார்' என்று விளம்பரங்கள் பறந்தன.

**யோக விளக்கம்**

இரவு ஏழு மணி; பேரூர் மாளிகையில் பெருங்கூட்டம். படக் கருவிகளுடன் இதழ் எழுத்தர் வந்திருக்கின்றனர். கூட்டத்தில் பாதி வெள்ளையர்; பாதி இந்தியர். நான் "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்ற மூலர் வாய்மொழியைக் கொண்டு உடலுறுதிபெறும் யோகத்தை விளக்கிப் படம் வரைந்து உட்புற உறுப்புக்களின் பண்பையும் பயனையும் சொன்னேன். பிறகு உட்சுரப்பிகள் (Endocrines) சுரக்கும் அமுதங்களை (Hormones) விளக்கினேன். மூளை, முள்ளந்தண்டு, உயிரி, உள்ளம், ஈரல், குடல், நாடிநாளங்கள், குருதித் துடிப்புகள், மூளையின் நுட்பங்களை விளக்கி, ஒவ்வொரு பகுதியும் உறுதி பெறும் இருக்கை, மூச்சுப் பயிற்சிகளைக் காட்டினேன். இறுதியில் கற்பூரம் ஏற்றி எல்லாரையும் சிவநாமம் பாடச் சொல்லி, அச்சுடரையே ஊன்றிப் பார்க்கச் செய்தேன். அதே சுடர் புருவ நடுவே ஒளிர்வதாக ஊகிக்கச் செய்து தியானமளித்தேன்.

ஓம்சிவ ஓம்சிவ சிவஓம்
ஓம்சிவ ஓம்சிவ சிவசிவஓம்

என்ற மந்திரத்தை மூன்று நிமிடங்கள் மோகனப் பண்ணிற் பாடி கற்பூரச் சுடரைப் புருவ நடுவே குறிவைத்து நோக்கச் செய்தேன். பிறகு "இன்றெனக்கருளி .. ...எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை" என்ற திருவாசகம் பாடி ஆங்கிலத்தில் விளக்கம் செய்தேன்.

**சீவனிற் சிவமயம்**

"Indian Mystic Shows The Light"

என்று மலர்கள் போற்றின; மக்கள் போற்றினர். மறுநாள் லெனேசியா நகர மன்றத்தில் மாபெருங் கூட்டம். வெள்ளையர் தமது கிள்ளையருடன் வந்திருந்தனர். அன்று Siva Mystics - சிவயோகிகள் என்பது பற்றி இசையுடன், ஆங்கிலத்தில் தேவாரங்களை விளக்கிப் பேசினேன். இசைக் கருவிகள் குரலுடன் கூடிக் குழைந்தன. நடராச வடிவத்தின் உட்பொருளை விளக்கிக் கற்பூரவொளி காட்டும்போது அனைவரும்

எழுந்து நின்று வணங்கினர். மறுநாள் பிரிடோரியாவில் இந்தியர் அமைத்த தமிழ் மன்றத்தில் ஏராளமான கூட்டம். "Siva in jiva" சீவனிற் சிவமயம் என்பது பற்றி இரண்டுமணி நேரம் தேவாரப் பாசுரங்களுடன் பேசினேன். அற்புதத் தேவாரங்கள் பாடும்போது 'அரோஹரா அரோஹரா .. சிவ சிவா சிவசிவா" என்று கூட்டம் கூவியது. தமிழர் உள்ளம் தமிழார்வக் கடலானது. நீங்களும் பாடி மகிழ,

**சிவ முழக்கம்**

ஓம்என ஒலிப்பதும் — ஓம்சிவம்
    ஓதுவேத நாதமும் — ஓம்சிவம்
ஆம்என உணர்வதும் — ஓம்சிவம்
    ஆன்மாவில் அமர்வதும் — ஓம்சிவம்
நான்எனத் துடிப்பதும் — ஓம்சிவம்
    ஞாலமாய் நடிப்பதும் — ஓம்சிவம்
தேன்எனச் சுவைப்பதும் — ஓம்சிவம்
    சித்தத்திற் களிப்பதும் — ஓம்சிவம்
வானென விரிந்ததும் — ஓம்சிவம்
    வளியெனப் பரந்ததும் — ஓம்சிவம்
ஊனிலே உயிர்ப்பதும் — ஓம்சிவம்
    உள்ளத்தே ஒளிர்வதும் — ஓம்சிவம்
அன்பிலே வளர்வதும் — ஓம்சிவம்
    அறிவிலே விளைவதும் — ஓம்சிவம்
என்பிற் பெண் எழுந்ததும் — ஓம்சிவம்
    எரியிலே இருந்ததும் — ஓம்சிவம்
வெள்ளத்தை எதிர்த்ததும் — ஓம்சிவம்
    வெற்றியை அளித்ததும் — ஓம்சிவம்
உள்ளத்தைத் திறந்ததும் — ஓம்சிவம்
    ஓம்என ஒலிப்பதும் — ஓம்சிவம்
நாலுவேத மாவதும் — ஓம்சிவம்
    நாலுயோக மாவதும் — ஓம்சிவம்
நாலுசாத னங்களும் — ஓம்சிவம்
    நாலுமுத்தி தருவதும் — ஓம்சிவம்
முப்பொருளின் உண்மையும் — ஓம்சிவம்
    மூன்றுட லிருப்பதும் — ஓம்சிவம்
எப்பொருளு மானதும் — ஓம்சிவம்
    இதயநடன ஜோதியும் — ஓம்சிவம்

இந்தச் சிவ முழக்கம் உருக்கமாக நடந்தது. சிலர் கண் கசிந்துருகினர். சிலர் இடுப்பை வளைத்தாடினர். சிலர்

தலையைச் சுழற்றினர். பலர் தாளங்கொட்டினர். ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' ''சொற்றுணை வேதியன்'' ''மற்றுப் பற்றெனக்கின்றி'' ''நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்'' என்ற தேவார அடிகளை எல்லாரும் ஆவேசமாகப் பாடினர். கூட்ட முடிவில் விருந்து நடந்தது. ''எங்கள் ஊருக்கு வருக'' என்று அன்பர் பல ஊர்களுக்கு அழைத்தனர். செய்தித்தாள்கள் நல்ல விளம்பரம் தந்தன. மறுநாள் பெனோனியில் மாபெரும் கூட்டம். அதில் நடராச வழிபாடு நடந்தது. திருவாசகம் பிடித்த பத்து விளக்கம் நடந்தது. சில யூதரும், கிறித்து வரும் கேட்டு மகிழ்ந்து என்னைப் பார்த்தனர். சொற்பொழிவு களில் கிறித்து சமயத்திற்கும், யூத சமயத்திற்கும் சைவ சமயத் திற்கும் உள்ள ஒற்றுமைகளை விளக்கினேன். அப்பரைப் பற்றிப் பேசும்போது காந்தியைப் பற்றி விளக்கினேன்.

**காந்தி நினைவு**

நான் மேடையைவிட்டுக் கீழே வந்ததும், என்னை வெள்ளையர் சூழ்ந்து கொண்டனர். E. சோலாஷ் (Solase) என்ற முதியார் காந்தி எங்கள் வீட்டிற்கு வந்தார். ''அவர் பாரிஸ்டர். அற்புதமான மனிதர், இனிய மனிதர், என் அண்ணர் அவரைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதினர். டால்ஸ்டாய் பண்ணையிலிருந்து அவர் ஜோ'பர்கு வழக்ககத்திற்கு நடந்தும் வருவார்; குதிரை வண்டியிலும் வருவார் அவரது பொறுமைப் புன்னகையும் எளிய நடையுடையும் தனிக்கவர்ச்சி யுடையன.'' மற்றொரு முதியார் 'அவர் சட்டைகளை அவரே வெளுத்தணிவார். அவரே இஸ்திரி போடுவார். எங்கள் வீட்டில் வந்து கிழங்கவித்து, ரொட்டியுடன் உண்டு பழச்சாறும் பருகுவார்''...என்றார்.

மறுநாள் காந்தி வாழ்ந்த டால்ஸ்டாய் பண்ணையைக் கண்டோம். அது யார் யார் கைக்கோ மாறிப்போனது. ஃபெலிக்ஸ் நடேசன் ஏற்பாட்டின்படியே பிரிடோரியா அச்சவைச் செயலாளரைக் கண்டு பேசினேன். அமைச்சர் தலைவர் ஒர்ஸ்டர் கேப் டவுன் சென்றிருந்ததால் அமைச்சகச் செயலர் என்னுடன் மனம் விட்டுப் பேசினர்.

**மேயர் விருந்து**

தென்னப்பிரிக்க வெள்ளையர் முன்னே ஆங்கிலத்திற்கு முதன்மை யீந்தனர். இப்போது ஆஃப்ரிகான்ஸ் என்ற ஒரு கலப்பு மொழி முதன்மை பெற்று வருகிறது. அதில் இரண்

டொன்று பேசினல் பிரிடோரியா வெள்ளேயர் மிக்க மகிழ்கிருர்கள். முதலில் ஒரு ஆஃப்ரிகான்ஸ் டாங்கி (Dankie) டாங்கி என்று நண்பருடன் பேசிவந்தார். டாங்கி என்ருல் ஆங்கிலத்தில் கழுதை. நான் அதைப் பேசவே அஞ்சினேன். பிறகு ஒரு நண்பர் எனக்கு ஆஃப்ரிகான்ஸ் நூல் அளித்து அதையே பதிவு செய்த தட்டும் (record) தந்தார். நானும் சிறிது கற்றேன்.

Good morning—Goeie more (ஹயபோரா)
Good evening—Goeie naand (ஹயநாண்ட்)
Good night—Goeie nag (ஹய நாக்)
How are you—Hoe gaan dit met jow?
Fine thanks—Goed Dankie
That is fine—Dls gaaf
Good bye—Ton siens

இப்படிச் சில மொழிகளேக் கற்று வெள்ளேயருடன் பேசினேன். அவர்கள் பேசும் ஆஃப்ரிகான்ஸ் ஃபிரெஞ்சு-ஜர்மன் கலப்பாயிருந்ததால் நான் எளிதில் ஆஃப்ரிகான்ஸ் அறிய முடிந்தது. ஆங்கிலம் தெரியாத ஆஃப்ரிகானுடன் பேசும்போதும் அவன் சொற்களேக் கொண்டே Nee dankie (No thank you-வேண்டாம் நன்றி) Ja asseblief (yes please சரி....மகிழ்வு) என்று விடை கூறினேன். ஆனல் ஒன்று அவரவர் தாய் மொழியே அவரவருக்கு உறுதி தாய்மொழியை மறந்த தமிழர் இன்று ஆங்கிலம் நாளே ஆஃப்ரிகான்ஸ், அடுத்தநாள் வேறு ஆட்சிமொழி கற்ருலே பிழைப்புண்டு. உலக மொழிகளில் மிக எளியமொழி ஆங்கிலமே, அதற்கு இணேயாக நிற்கக் கூடியது தமிழே. தமிழை நன்ருக வளர்த்து உலக மொழியாக்க வேண்டும் என்று என் உள்ளம் துடிக்கிறது. ஆங்கிலேயர் இந்தியாவிலோ ஆப்பிரிக்காவிலோ ஆங்கிலத்தைப் பரப்பியது போலத் தமிழன் ஏன் தமிழைப் பரப்பக் கூடாது? சைவ சமயத்திற்கு அடுத்தபடி நான் தமிழ் உணர்ச்சியைத் தூண்டினேன் பல மொழியினர் கூடிய கூட்டங்களில் தமிழர் பண்பாட்டையும், தமிழ் வளத்தையும், தமிழில் உள்ள அரிய கருத்துக்களேயும் சொன்னேன். கடல் கடந்து சென்ற தமிழர் தமிழைத் துறக்கவில்லே. அவர்களுக்குள்ள தமிழார்வம் கடலினும் பெரிது. எனினும் காலவினே அவர்களுக்குச் சட்டை தொப்பி மாட்டிப் பிறமொழியே பேசித் தமிழை மறக்கச் செய்தது ஏன்? வயிறு வளர்க்க ஆங்கிலம், ஆஃப்ரிகான்ஸ் வேண்டும். தமிழ் ஆட்சிமொழி யில்லே. தமிழுக்குப் பின்னல் தமிழ் அரசு இருந்தால் தமிழ் மக்கள்

கருத்தை ஆளும். திருக்குறளையும், திருத்தொண்டர் வரலாற்றையும், திருவாசகத்தையும் திருமந்திரத்தையும் (தமிழின் நான்கு திருக்கள்) விளக்கம் செய்து ஆங்கிலத்திலும் உணர்த்தியபோது "ஆகா, தமிழராகிய நாம் தமிழை மறந்தோமே இனித் தமிழைப் பயில்வோம்" என்ற உணர்ச்சி பலருக்கு எழுந்தது. கல்வித்துறை அலுவலாளர் பலர் கூடி என் கருத்தை வரவேற்றனர். அவரவர் பசிக்கு உண்பதுபோல, அவரவர் பண்பாட்டிற்குத் தமிழறிவை வளர்கக வேண்டும். ஆதலால் தமிழை மறந்த தமிழர் தமிழை எளிதிற் கற்க நான் ஐந்து நூல்கள் எழுதி வெளியிட ஒப்புக் கொண்டேன்; இப்போது நூல்கள் ஆயத்தமாகின்றன; விரைவில் வெளி வரும்.

அரசியலாருடன் பேசும்போதும் தமிழர் அந்த நாடு செழிக்கப் பாடுபடுவதையும் தமிழின் தனிச் சிறப்பையும் எடுத்துரைத்தேன். என் சொற்பொழிவுகளுக்குத் திருவாட்டி பாமேலா ஸோலாஷ் (Pamela solash) வந்திருந்தார். அவர் நகரத்தலைவர் (மேயர்) அலுவலகத்தில் வேலை செய்பவர். அவர் என்னைப்பற்றி மேயரிடம் விரிவாகச் சொல்லவே ஃபெலிக்ஸ் முதலியோரும் வேண்டவே, மேயர் என்னை ஒரு பெரிய விருந்துதர அழைத்தார்.

மேயர் பிரிகேடியர் J. C. லென்னர் M. C மாண்பெரும் அறிஞர். அவர் என்னையும் என்னுடன் வந்த தமிழன்பரையும் இன்முகங்காட்டி அழைத்துத் தமது விருந்தறையில் அமர்த்தினார். அங்கே அரிய நகராட்சியாளர் (அனைவரும் ஆங்கிலேயர்) அமர்ந்திருந்தனர். எனது கனியுணவை நான் உண்டேன். அவர்களும் என்னுடன் சேர்ந்துகொண்டனர். யாரும் ஊன் உண்ணவில்லை; விஸ்கி பருகவில்லை, சுருட்டுப் புகைக்கவில்லை. ஆசாரமாக நடந்தனர். "பேரறிஞரான தங்களை வரவேற்பது ஜோகான்ஸ்பர்கு நகராட்சிக்கே தனிப்பெருமை. தங்கள் அருமை பெருமைகளை அன்பரும், மற்றவர்களும் ஒவ்வொரு நாளும் சொல்லக்கேட்டோம். தங்கள் முகப்பொலிவும், அகப்பொலிவும், அன்பும் அருளும் அறிவும் எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தன" என்று இனிது கூறினர் மேயரும் ஆட்சியாளரும். படக்கருவிகள் படக் படக்கென்று வேலை செய்தன. நான் பேச்சுக்கிடையே பயனுள்ள கேள்விகேட்டுப் பயனுள்ள விடைகளைப் பெற்றேன்.

"உலகெங்கும் சுற்றிப் புதுப்புது நண்பரைக் கண்டு பேச என் உள்ளம் துடிக்கிறது. இந்தப் பொன்னாட்டில் பொன்னனை

அன்பரைக்கண்டு நட்புறவு கொண்டேன். இந்நாட்டிற்கு வந்தது என் வாழ்வின் சிறந்த நிகழ்ச்சியும் மகிழ்ச்சியுமாகும். உங்கள் புகழ்ச்சிக்கு நன்றி. "யாதும் ஊரே யாவரும் கேளிர்; சேரவாரும் செகத்தீரே," என்பது எங்கள் பண்ணொலி.

"மனித சமுதாயம்—ஒன்றே—அதன்
மன்னவ ஞானமனச் சாட்சி ஒன்றே
இனிய வுலகுமுர் ஒன்றே—உல
கெங்கும் விளங்கும் இறைவனும் ஒன்றே
எல்லாரும் இன்புற வாரீர்—நாம்
எல்லாரும் எல்லாரும் இன்புற வாழ்வோம்."

என்பது எங்கள் ஒருமை முழக்கம். அந்த ஒருமை முழக்கத்தை இங்கும் வீறிடவே வந்துள்ளேன். எங்கள் மொழி உலகின் முன்மொழி, தொன்மொழி. அதில் திருக்குறள் உள்ளது. அதை டாக்டர் அல்பர்ட் ஷ்வெட்ஸேசரும் போற்றியிருக்கிறார். எனது திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்துத் "தங்கள் ஆங்கிலக் குறளை பியானோவுடன் பாடி மகிழ்ந்தேன். அன்பின்வழியது உயிர்நிலை (The seat of life is love alone) என்னும் வரி என் உள்ளத்தைக் கவர்ந்தது" என்று சொன்னாராம். ஷ்வெஸ்டரின் இனிய சொற்களை இந்த விருந்துடன் அருந்த விரும்புகிறேன்:

"Stupendous opportunity awaits men who
are writing to be **simply human**"

"மனிதப் பண்புள்ளவனுக்கு மிகப்பெரிய வாய்ப்புகள் காத்திருக்கின்றன" இதையே எமது வள்ளுவர்: கண்ணோட்டத்துள்ளது உலகம் (World lives by looks of lovely worth), அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை. (Virtue enhances joy and gain) என்கிறார். உங்கள் நட்பை எனக்கு இன்றளித்த இறைவனை வணங்குகிறேன். எங்கள் சமயம் எல்லார் உள்ளும் இறைவனைக் காணல்; எல்லாரும் இன்புறவாழுதல் ஆகிய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட உலகச் சமயம்—அது சீவனிற் சிவம் காண்பது; உலகைச் சிவமயம் என்பது எல்லா உயிர்களையும் இறைவன் திருமேனியாகப் பார்ப்பது.

"உயிர்மேனி யாக்கொண்டே
ஒந்தமொரு சோதி
பயிலா லயமுலகு பார்"

கிறித்துவின் பொறுமையன்பை அப்பரின் அருட்பொறையிற் காண்கிறோம். யோவான் சுவிசேசக் கருத்துக்

களை மாணிக்கவாசகர் திருவாசகத்திற் காண்கிறோம். எங்கள் முனிவர் தாம்கண்ட இன்பத்தை உலகமும் நுகரவே அருட் பணி பராவினர். மொழி, சமயம், நாடு, நிறம், பொருளா தாரங்களில் எப்படியிருந்தாலும், நாம் வாழும் உலகம் ஒன்றே. நம் உள்ளத்தில் துடிக்கும் உயிர் ஒன்றே உயிருக் குயிராகி நம்மையெல்லாம் ஆட்கொண்டு நடத்தும் கடவுளும் ஒன்றே.

"ஒன்றே உயிருலகம்
ஒன்றே உலகிறைவன்
ஒன்றே இறைவன் உறை யுள்"

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது எங்கள் திருமந்திரம்.

இப்படி உயர்ந்த பண்பாடுடைய தமிழர் சென்ற நூற் ருண்டில் இந் நாட்டிற்கு வந்து கரும்புத் தோட்டத்திலும், கனிகளிலும் கடும்பாடு பட்ட கதை உங்களுக்குப் புதிதன்று. அவர்கள் இந் நாட்டினைப் பசும் பொன்னழகு குலுங்கச் செய் தனர். இன்று அவர்கள் இந்நாட்டுடன் ஒட்டுறவாக வாழ் கிருர்கள். அவர்களை மறக்கக்கூடாது, ஒதுக்கக்கூடாது, வெதுப்பக்கூடாது. அவர்களையும் மனிதராக மதித்து மனிதருக் குரிய உரிமை தந்து நடத்த வேண்டுகிறேன். இதை உங்கள் மனச்சாட்சியும் அறியும். இந்தியர் இந்நகரிலிருந்து 40 மைல்களுக்கு அப்பால் வாழுகிருர்கள். அவர்கள் அவ்வளவு தொலைவிலிருந்து இங்கே வந்து உழைத்துப் பிழைக்கிருர்கள்! இவ்வளவு வியன்பெரும் மாளிகை—நகரை அமைத்த உங் களுக்கு நான் என்னசொல்லப்போகிறேன்; உங்கள் அறிவும், இந்தியரின் அயரா உழைப்பும் சேர்ந்தே இவ்வளவு மாண் பெரும் ஊரை ஆக்கியது என்பதை நினைந்துணர்ந்து நேர்மை செய்வீர்கள் என்று வேண்டுகிறேன். ஒற்றுமையே வெற்றிக்கு உயிர்.

"North and South and East and West
Are one in Horizon
This harmony of life is best
When all are every one
Prosper all, prosper all
Conscious of the one in all"

---

(தொடரும்)

# எது தமிழ் மரபு?

## [திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம்]

'எது தமிழ் மரபு' என்ற தலைப்பில் மதிப்புக்குரிய கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 19 பரல் 9இல் எழுதிய கட்டுரையிற் கண்ட குறிப்பினை மீண்டும் இங்கே நினைவுபடுத்துவது குற்றமாகாது.

டாக்டர் வே. சாமிநாதையரவர்கள் 21—9—1941இல் திருச்சி வானொலியில் பேசியது 6—11—41 'சிவநேசன்' இதழில் வெளியிடப் பெற்றுள்ளது. அது:

"ஓர் ஏழை வேலைக்காரனைப் பார்த்துச் 'சோறு தின்றாயா?' என்று கேட்கலாம். ஒரு கனவானைப் பார்த்து அப்படிக் கேட்கக் கூடாது. கேட்பதில் இலக்கணக் குற்றம் ஒன்றுமில்லை. அர்த்தம் விளங்காமற் போகவில்லை. ஆனாலும் அப்படிக் கேட்பது தமிழ்மரபன்று. 'போஜனம் ஆயிற்றா?' 'நிவேதனம் ஆயிற்றா?' என்று கேட்பதும் துறவிகளைப் 'பிக்ஷை ஆயிற்றா?' என்று கேட்பதும் சம்பிரதாயங்கள்' என்பதே.

அதற்குத் திரு விசுவநாதம் அவர்கள் கூறுவது காண்க. அது:

"சோறு தின்றாயா?" என்று கேட்பதே தவறாகும். 'சோறு உண்டாயா?' என்று கேட்பதே தமிழ் மரபு. தமிழில் உண்ணல், தினனல், நக்கல், பருகல் என நால்வகை உண்டு. இதில் உள்ள வேற்றுமைகள் சங்க இலக்கியங்களைப் படித்த டாக்டர் ஐயர் அவர்கட்குத் தெரியாதவையல்ல. கனவான்களை 'உணவாயிற்றா?' என்று கேட்பது பொருந்தாதா?" என்பதே.

இங்கே பல்கலைப் பேரறிஞர் பா. வே. மாணிக்க நாய்க்கரவர்கள் செல்வி சிலம்பு 5 பரல் 4இல் கூறியது காண்க. அது:

"தின்னல் என்பதிலிருந்தே 'தீனி' வந்தது. 'நாய்க்குத் தீனி வை' என்றும், 'கோழிக்கு இரை வை' என்றும் தமிழர் பாகுபடுத்திச் சொல்வதைக் கவனிக்க. ஆறறிவுடைய மக்களைக் குறிக்கும்போது 'ஐயா இன்னும் உண்ணவில்லை' என்றே கூறப்படும். ஆனால், பொட்லர் (Butler) 'துரை தீனி தின்கிறார்' என்று சொல்வதைக் கேட்கிறோம் அல்லவா? துரைமார் குரங்குபோல் ரொட்டி முதலியவற்றை இரு கைகளிலும் வைத்துக் கடித்துக் கடித்துத் தின்பதால் ஐபறிவுடைய உயிர்களோடு ஒப்பிட்டுப் பொட்லர் அதற்குத் தகுந்த சொற்களை வழங்குவது போற்றுதற்குரியது" என்பதே.

வடமொழியைப் பயிலாமல் இளமை முதல் தமிழையே பயின்று சங்க இலக்கியங்களிலே தோய்ந்த டாக்டர் ஐயரவர்கள் முற்றிலும் தமிழ் மரபில்லாத சொற்றொடர்களைத் 'தமிழ் மரபு' என்று கூறியது வருந்துதற்குரியதாகும். இது பண்டிதமணியவர்கள் யாழ்ப்பாணத்திற் பேசியதன்பின் நிகழ்ந்த செய்தி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# திருமதி சாலினி இளந்திரையன் அவர்கள் டாக்டர் பட்டம் பெற்றார்

புதுடில்லி, திருவேங்கடவன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியையும் டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் துணைவியாருமான திருமதி சாலினி இளந்திரையன் அவர்களுக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. ''தமிழில் வாழ்க்கை வரலாற்று இலக்கியம்'' என்னும் பொருள் பற்றித் திருமதி சாலினி நிகழ்த்திய ஆராய்ச்சியை ஏற்று, பல்கலைக் கழகம் இந்தப் பட்டத்தை அவருக்கு வழங்கியிருக்கிறது.

வாழ்க்கை வரலாற்று இலக்கியம் இந்த நூற்றாண்டிலே தமிழில் புதிய பொலிவு பெற்றுள்ளது. இந்த இலக்கிய வகை தமிழில் எவ்வாறு தோன்றி எவ்வெவ்வாறு வளர்ச்சி அடைந்தது என்பதை விளக்கி மதிப்பிடுவதே இந்த ஆராய்ச்சி.

சங்க காலத்திலும் தொடர்ந்து வந்த பலநூறு ஆண்டுகளிலும் வாழ்க்கை வரலாற்று ஓர்மை எந்தெந்த விதங்களில் வெளிப்பட்டது என்ற வரலாறு இந்த ஆராய்ச்சியில் சுவையாக விவரிக்கப்படுகிறது; வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு, தன் வரலாற்றுக் குறிப்பு, நாட்குறிப்பு, நீதி புகட்டும் வாழ்க்கைக் கதை, ஒருதலைச் சார்பான வாழ்க்கை வரலாறு, இலக்கியத் தரமுடைய சுவையான வாழ்க்கை வரலாறு எனப் பலவிதமாக இந்த இலக்கியத்துறை வளர்ந்து வந்துள்ள வரலாறும் இதிலே முறையாகச் சொல்லப்படுகிறது. இந்தியத் தமிழகத்தில் மட்டுமன்றி ஈழம், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வெளிவந்துள்ள பெரியோர் வாழ்க்கைச் சரிதங்களையும் மதிப்பிட்டுச் சிறப்பிப்பதாக இந்த ஆராய்ச்சி அமைந்துள்ளது. தவிர, வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தைப் பற்றித் தமிழில் விரிவாக நடைபெற்றுள்ள முதல் ஆராய்ச்சியும் இதுவே.

தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சிச் சிறப்புப் பட்டங்கள் பெற்றுள்ள பெண்மணிகள் தமிழகத்தில் இரண்டு மூன்று பேரே இருக்கிறார்கள். 1954 இல் எம். ஏ. பட்டமும் 1958 இல் எம். லிட். பட்டமும் பெற்று இப்போது பிஎச். டி. (டாக்டர்) பட்டம் பெற்றுள்ள திருமதி சாலினி இளந்திரையன் அந்தச் சிலருள் ஒருவர் என்பது பாராட்டுதற்குரியது.

# அதிர்ச்சிதரும் விமான அவல நிகழ்ச்சி

சென்னையிலிருந்து 31—5—73 வியாழன் இரவு 7-35க்குத் தில்லிக்குச் சென்ற 'இந்தியன் ஏர் லைன்ஸ் போயிங் விமானம்' தில்லி விமான நிலையத்தில் இறங்குதற்குச் சில மணித்துளிகளின் முன் இரவு 9-48க்கு 2[illegible] அடி உயரத்திற் பறந்த நிலையில் ஒரு சிறு குன்றுமீது மோதித் தீப்பற்றி நொறுங்கி வீழ்ந்தது.

விமானத்தில் பயணஞ் செய்த விமான ஊழியர் எண்மர் உட்பட அறுபத்தைவரில் நாற்பத்தெண்மர் அவ்விடத்திலேயே உடல் கருகி உயிர் துறந்தனர். உயிரிழந்தவர்களுள் ஐவர் விமான ஊழியர்கள். பதினெழுவர் விமானத்திலிருந்து தூக்கி எறியப்பட்டுக் காயங்களுடன் உயிர் பிழைத்தனர். தலைமை விமான வோட்டுநரும், துணை விமான வோட்டுநரும் மற்றொரு விமானத் துணையாளரும் பெருங் காயங்களுடன் உயிர் பிழைத்தனர்.

இவ் விமானத்தில் பயணஞ் செய்து உயிர் துறந்தவர்களுள் நடுவணரசின் உருக்குத்துறை யமைச்சராகப் பணியாற்றிய திரு. மோகன் குமாரமங்கலமும் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களுள் ஒருவராகிய திரு. சே. பாலதண்டாயுதமும் தமிழ் மக்களின் போற்றுதலுக்குரிய உயர் நிலையாளர்களாவார்கள். இவ்விருவரும் உயிர் நீத்தமை தமிழகத்துக்குப் பேரிழப்பாகக் கருதக்கூடியதாகும். திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் கழகத்தோடு அணுக்கத் தொடர்பு கொண்டிருந்த காலஞ்சென்ற டாக்டர் சுப்பராயனவர்கள் திருமகனாராவர். அண்மையில் திரு. மோகன் குமாரமங்கலமவர்கள் தாம் கழகத்திற்கு வந்து மறைமலையடிகள் நூல்நிலயத்தை ஒருமுறை பார்வையிட விழைவு கொண்டுள்ளதாகக் கழக ஆட்சியாளரிடம் கூறியிருந்தார்.



10 6-73 அன்று சென்னைக் கண்ணப்பர் திடலில் நடைபெற்ற திரு. மோகன் குமாரமங்கலம் மறைவு குறித்த இரங்கற் கூட்டத்தில் நடுவணரசு தொழிற்றுறையமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், 'நானும் திரு. மோகனும் அரசியலில் இரட்டையராக இருந்தோம். திரு மோகனின் மறைவு எனக்குப் பேரிழப்பாகும்'' என உருக்கமாகக் கூறிய சொற்கள் நம் நெஞ்சை நெகிழ்விக்கின்றன.

சென்னைச் சுங்கத்துறையலுவலராகப் பணியாற்றிய திருமதி கௌசல்யா நாராயணன் என்னும் அம்மையாரும் அவல நிகழ்ச்சியினால் உயிர் துறந்தவர்களுளொருவராவார். இவ்வம்மையார் கவின்கலைச் செல்வியராகத் திகழ்ந்தனர். ஆடற் கலையில் வல்லவர். பாடற் கலையில் பயிற்சியுடையவர். எழுத்துக் கலையில் திறம் பெற்றவர். புதினங்கள் சில முன்னமே இவரால் எழுதப்பட்டுள்ளன. தினமணிக்கதிரில் 'வாழ்வைத்தேடி' யென்னுந் தலைப்பில் கதையொன்று தொடர்கின்றது. எனவே, இவர் மறைவு கலையுலகிற்குப் பேரிழப்பாகும்.

இந்நிகழ்ச்சியில் உயிர் துறக்க நேர்ந்தார் அனைவர்தம் உற்றார் உறவினர் நிலையெற்றேயென வெண்ணுங்கால் நெஞ்சந் துணுக்குறு

கின்றது. அனைவர்க்கும் இறைவன் ஆறுதலளிப்பானாகவென வேண்டுவதன்றிப் பிறிதென் செயவல்லோம்?

**ஊழ்வலி :**

இவ் வவல நிகழ்ச்சி தொடர்பான சில செய்திகள் நமது சிந்தனையைத் தூண்டக் கூடியனவாகவுள்ளன.

நடுவணரசின் மின்விசைத் துணையமைச்சர் திரு. பலகோவிந்த வர்மா என்பார் இவ்விமானப் பயணிகளுளொருவர். இவர் திருவருளால் உயிர் பிழைத்துள்ளார். இவர்தம் இருக்கை விமானத்தின் முன்னணியிலமைந்தது. அடுத்த விருக்கை வெறுமையாக விருந்தது. திரு. மோகன் குமாரமங்கலமவர்களிருக்கை விமானத்தின் இடைப் பகுதியிலமைந்தது. வெறுமையாகவிருக்கும் தம் பக்கத்திருக்கைக்கு வந்துவிடுமாறு திரு. மோகன் அவர்களைத் திரு. வர்மா அழைத்தார். ஆனால், தமதிருக்கையே நல்லமைப்பாக விருக்கிறதென்று அழைப்பை மறுத்துவிட்டார் திரு. மோகன். முற்பகுதியிலிருந்த திரு. வர்மாவும் பிறரும் பிழைத்தனர்.

**ஊழினமைப்பு :**

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தானமுந் துறும்"

என்னும் பொய்யாமொழி எத்துணைப் பொருளுடையதாகத் தோன்றுகிறது!

திரு. கபில் என்பவர் காந்தி கிராமத்திற்கு வந்துவிட்டுத் தில்லி திரும்பும் நிலையினர். அன்று இரவு அடுத்தபடியாகப் புறப்படும் விமானத்தில் செல்லுவதற்கென்று கட்டணச்சீட்டுப் பெற்றிருந்தார். ஆனால், விமான நிலையத்திற்கு வந்தபோது மாலை விமானமே புறப்படாமல் தாழ்த்திருக்கக்கண்டு அவ் விமானத்திற்குரிய கட்டணச்சீட்டை மிகுதொகை செலுத்தி மாற்றிப் பெற்றுச் சென்றார். உயிரிழந்தார்.

சேலம் பஞ்சாப் நேஷனல் கிளை வங்கியின் மேலாளர் 48 அகவை திரு. இராசகோபாலன் என்பார் முதல் தடவையாக விமானத்தில் பயணம் செய்தார். பதவி உயர்வு பற்றிய நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதற்காக மனைவியார் தடுத்தும் கேளாமல் விமானத்தில் பயணஞ் செய்த இவரும் குடும்பத்தினர் கழிவிரக்கங் கொள்ளுமாறு உயிர் துறந்தார்.

'சாவாரை யாரே தவிர்ப்பார்'

**ஆகூழ் ஆட்கொள்ளல் :**

திரு. கே. பி. உன்னி கிருட்டிணன் என்னும் நாடாளுமன்ற உறுப்பினர் திருவனந்தபுரத்திலிருந்து தில்லி செல்வதற்காகக் கட்டணச் சீட்டுப் பெற்றிருந்தார். ஆனால், சென்னை வந்தவுடனே ஒருநாள் சென்னையில் தங்கிச் செல்ல வேண்டுமென்ற வுள்ளுணர்ச்சியால் தொடர்ந்து தில்லி செல்லுவதை நிறுத்தம் செய்துவிட்டார். திரு. மோகன் தொடர்ந்து தம்முடன் பயணஞ் செய்யுமாறும், $2\frac{1}{2}$-மணி நேரம் பல செய்திகளைப்பற்றி அளவளாவிப் பேசலாமென்றும் வற்புறுத்தியும் அவர் அதனை ஏற்றுக் கொள்ளாமல் நின்றுவிட்டார். 'ஏன் அவ்வாறு செய்தேன் என எனக்கே தோன்றவில்லை' யெனக் கூறுகிறாரவர்.

'ஆவாரை யாரே யழிப்பார்'

**வியத்தகுநிலை :**

விமானத்தில் செல்லும் பயணிகளுள் பொதுவாகப் பதினைவரேனும் உயிரீட்டுப் பொறுப்பு (இன்ஷூரன்ஸ் பாலிஸி) பெற்றுச் செல்வது

வழக்கமாம். ஆனால், இந்த விமானத்தில் சென்றவர்களுள் ஒருவர்கூட உயிரீட்டுப் பொறுப்புச் செயல் மேற்கொள்ளவில்லையாம். அன்று பிற விமானங்களில் சென்ற பயணிகளுள் பலர் உயிரீடு பெற்றுள்ளனர். உயிரீடு செய்துகொண்ட பயணிகள் உயிர்துறக்க நேர்ந்தால் அவருற வினருக்கு அரையிலக்க ரூபாயிலிருந்து ஒன்றரையிலக்க ரூபா வரை ஈட்டுத் தொகை கிடைக்குமாம்.

இந்நிகழ்ச்சிகளையெல்லாந் தொகுத்தெண்ணுங்கால் ஏதோவொரு பேராற்றல் இவ்வுலகுயிர் வாழ்க்கையை இயக்குகின்றதென்னும் பாரிய வுண்மை நுண்ணுணர்வினருள்ளத்திற்றோன்றமற்றீராது.

---

## தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஐம்பதாம் பிறந்தநாள் அருட்கொடை

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஏழை எளிய மக்களுக்குச் செய்யுந் தொண்டே இறைவனுக்குச் செய்யுந் திருத் தொண்டாகுமென்று கருதி நல்ல சில திட்டங்களைச் சூழ்ந்து தேர்ந்து செயற்படுத்தி வருவது சான்றோர் களின் போற்றுதலுக்குரியதாகும்.



கடந்த நாற்பத்தொன்பதாம் பிறந்தநாள் விழாவின் கொடையாகக் கண்ணொளி வழங்குந் திட்டத்தை மேற்கொண்டு இதுவரை ஏறக்குறைய கண் பார்வை இழந்தவர் ஐம்பதினாயிரவர்க்குத் தீர்வு மேற்கண்டு கண்ணாடி வழங்குவித்து மகிழ்வித்துள்ளார்.

இவ்வாண்டு தம் ஐம்பதாம் பிறந்தநாள் 3—6—73 விழாக் கொடையாகக் கையிழுவை இருக்கை வண்டி (Handpull Rickshaws) கட்கு மாறாக மூவுருளை இருக்கை மிதிவண்டி (Cycle Rickshaws) களை விலையின்றி வழங்குந் திட்டத்தை வெளியிட்டு அதன் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டமை பெரிதும் பாராட்டுதலுக்குரிய தாகும்.

'அன்பே சிவம்' என்னும் ஆன்றோர் கொள்கைக்கிணங்க முதிர்ந்த அன்பின் வெளிப்பாடாகிய இச்செயல் பெருமதிப்புக்குரியதாகும்.

சைவசித்தாந்தக் கழகம் டாக்டர் கலைஞர் அவர்களின் இச்செயலைச் சாலவும் போற்றிப் பாராட்டுகின்றது.

இந்நற்பணிக்காகக் கழக ஆட்சியாளரால் சிறுதொகையொன்று வழங்கி கலைஞர் முதல்வரவர்களுக்குப் பாராட்டு வாழ்த்துரை யொன்றனுப்பப்பட்டது.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : வ. சுப்பையா.